வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 01.07.2021 வியாழக்கிழமை | இதழ் : 210 | பக்கங்கள் : 16

# தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் 3 கட்சிகள் கூட்டாக செயல்பட தீர்மானம்

## ஜே.வி.பி., த.மு.கூ., ஸ்ரீல.மு.கா. கொழும்பில் நேற்று பேச்சு; ஏனைய சிறு கட்சிகளையும் இணையுமாறு அழைப்பு



கொழும்பு, ஜூலை 01

தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.), தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கூட்டாக செயல்பட தீர்மானித்துள்ளன. இந்த செயல்பாட்டில் ஏனைய சிறு கட்சிகளையும் இணைத்துக்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான அழைப்பும் விடுக்கப்படவுள்ளது.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பில், ஜே.வி.பி.

15

# சீனர்களிடமிருந்து நாட்டை காப்பதற்கு முன்வாருங்கள்!



## மகாசங்கம், முப்படைகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு

கொழும்பு, ஜூலை 01

சீனர்களின் செயல்பாடுகளைப் பாதுகாக்கவே அரசு முன்னின்று செயல்படுகின்றது. எனவே தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கு முன்வருமாறு மகா சங்கத்தினருக்கும் பாதுகாப்புப்படை வீரர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது ஐக்கிய மக்கள் சக்தி.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

15

# பருத்தித்துறை கொத்தணி தொற்று மேலும் அதிகரிப்பு

## உயிரிழந்த முதியவர் உட்பட நால்வருக்கு கொரோனா

யாழ்ப்பாணம்,ஜூலை 01

பருத்தித்துறை - தும்பளை பகுதியில் ஒரே குடும்பப் பின்னணியில் 15 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் அந்த தொற்றாளர்களின் அயலில் வசிக்கும் உயி

15

# கொரோனா தொற்றால் மேலும் 47 பேர் மரணம்!

கொழும்பு, ஜூலை 01

நாட்டில் மேலும் 47 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தனர். இதன் மூலம் நாட்டில் பதிவான உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 3,077 ஆக அதிகரித்

15

## சீன இராணுவ சீருடை விவகாரம்:

# நிறுவன சீருடையே அது என்று தூதரகம் விளக்கம்

கொழும்பு, ஜூலை 01

சீன இராணுவத்தின் சீருடையை ஒத்த உடையை திஸ்ஸமஹராம வாவி புனரமைப்பில் ஈடுபட்டவர்கள் பயன்படுத்தினர். இது குறித்து பாதுகாப்பு செயலர் எழுப்பிய கேள்விக்கு

15

# குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை – அரச பேச்சாளர்!

கொழும்பு, ஜூலை 01

சீன இராணுவ சீருடையை ஒத்த உடைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று அரசாங்கத்தின் இணை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல நேற்று தெரிவித்தார்.

15

# 1,864 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

கொழும்பு, ஜூலை 01

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,864 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத்

15



# புனர்வாழ்வு ஒருங்கிணைப்பாளராக கீதநாத்துக்கு மேலதிக பொறுப்பு

கொழும்பு, ஜூலை 01

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிற்கான அரசாங்கத்தின் மீள்குடியேற்ற, வீட்டுத் திட்ட மற்றும் புனர்வாழ்வு ஒருங்

15




# மீண்டும் நாடு முடக்கமா? தீர்மானம் அடுத்த வாரம்

## டெல்டா மாறுபாடு வைரஸ் மேலும் பரவக்கூடிய அபாயம்

கொழும்பு, ஜூலை 01

இந்தியாவில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தி தற்போது பிரிட்டனில் அச்சுறுத்தலை தோற்றுவித்துள்ள டெல்டா திரிபு கொரோனா தொற்று இலங்கையில் மேலும் பரவக்கூடிய அபாயம் இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கையில் மீண்டும் பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பதா இல்லையா என்ற

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்குமிடையே நடைபெறவிருந்த பேச்சு பிற்போடப்பட்டிருப்பது பழைய செய்திதான்.

இப்படியொரு பேச்சு நடைபெறவிருக்கின்றது என்ற செய்தியை முதன்முதலில் ஊடகங்களுக்குத் தெரிவித்தவர், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஆபிரகாம் சுமந்திரன் மதியாபரணம் என்பது தெரிந்த சங்கதிதான்.

பின்னர் கூட்டம் ஒத்திவைக்கப்பட்ட செய்தியையும் அவரே ஊடகங்களுக்கு வழங்கினார். ஆனால், இந்தச் சந்திப்பிற்காக கொழும்பு சென்ற தலைவர்கள் நேரே இந்தியத் தூதுவரை சந்தித்திருந்தார்கள்.

அந்தச் சந்திப்பிலும், பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பிய பின்னர் அவரையும் சந்திப்பில் சேர்த்துக் கொள்வதற்காகத்தான் சந்திப்பு பிற்போடப்பட்டது என்ற தகவலையும் சுமந்திரன் இந்தியத் தூதுவரிடம் தெரிவித்திருந்தார். ஆனால், இந்தச் சந்திப்பு எப்படி ஏற்பாடு செய்யப்பட்டது என்பது இதுவரை வெளித்தெரியவில்லை.

கூட்டமைப்பினர் இப்படியொரு சந்திப்புக்கு கோரிக்கை விடுத்து அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதா? அல்லது ஜனாதிபதி தரப்பிலிருந்தே இந்தச் சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டதா என்பது இன்றுவரை பகிரங்கமாகத் தெரியவரவில்லை.

புதிய அரசியலமைப்பு ஒன்றை தயாரிக்கும் பணியில் இந்த அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாக, இந்த அரசாங்கம் பதவியேற்ற ஆரம்பத்திலிருந்தே தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இதுதொடர்பாக ஆராய்ந்து வரும் குழுவினர் அரசியல் கட்சிகளின் கருத்துக்களையும் கேட்டுப் பெற்றிருந்தனர்.

இந்நிலையில் கூட்டமைப்பும் தமது கருத்துக்களை அந்தக் குழுவிடம் கொடுத்து விட்டது. தமது யோசனைகள் குறித்து ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்துவதற்காகவே கூட்டமைப்பினர் ஜனாதிபதியைச் சந்திக்கவிருக்கின்றனரென சில ஊடகங்கள் 'ஆருடம்' தெரிவித்திருந்தன.

இலங்கைத் தமிழர் பிரச்னையில் மூக்குநுழைத்த இந்தியா, இலங்கையுடன் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டது. அந்த உடன்படிக்கையின்பேறாகவே மாகாண சபைகள் அறிமுகம் செய்யப்பட்டன. ஒப்பந்தம் அமுல்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்காகவே இந்திய அமைதி காக்கும் படையும் இலங்கை வந்தது.

எந்த மக்களுக்காக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதோ அந்த மக்களின் பெரும்பகுதியினர் அதனை நிராகரித்தனர். எவர் நலனைக் கவனிக்க இந்தியப் படைகள் இலங்கை வந்தனவோ, அவர்களே இந்தியப் படையுடன் மோதலை ஆரம்பித்தனர். இவை எல்லாம், இந்தியப் படை தோல்வியுடன் நாடு திரும்பவும், மாகாண சபைகள் வினைத்திறனுடன் இயங்கவும் தடையாக அமைந்தன.

அதாவது, யாருக்காக இந்தியா மாகாண சபையை உருவாக்கியதோ அவர்களே அதனை நிராகரித்த பின்னர் அதனை வலியுறுத்த இந்தியாவால் முடியவில்லை. இப்போது தமிழர் தரப்பில் பேசுவதற்காக கூட்டமைப்பை ஜனாதிபதி அழைத்திருக்கிறார். அல்லது அவர்கள் ஜனாதிபதியைச் சந்திக்கின்றனர். அவர்களின் சம்மதத்ததுடன் எத்தகைய தீர்வைத் தந்தாலும் தமிழ் மக்கள் அதனை ஏற்றுக் கொள்வார்கள் என்று கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு உறுதியளிக்கக்கூடிய நிலையில் இருக்கின்றதா என்பதே இன்று கேள்விக்குரியது.

கடந்த தேர்தலில், வட மாகாணத்தில் சுமார் ஆறு லட்சம் மக்கள் வாக்களித்திருந்தனர். இந்த வாக்குகளில் கூட்டமைப்பு பெற்ற வாக்குகள் வெறும் ஒரு இலட்சத்து எண்பத்து இரண்டாயிரம்தான்.

கிழக்கு மாகாணத்தில் சுமார் ஒன்பது இலட்சத்து நாற்பதாயிரம் பேர் வாக்களித்திருந்தனர். இவர்களின் வாக்குகளில் வெறும் நூற்று நாபத்திமூன்று ஆயிரம் வாக்குகளைப் பெற்றது கூட்டமைப்பு.

கூட்டமைப்புடன் மாத்திரம் ஜனாதிபதி பேசுவது எந்தவித பலனையும் தமிழ் மக்களுக்கு கொண்டுவரப் போவதில்லை. ஆக, கூட்டமைப்பினரே சொல்வதுபோல அரசாங்கம் சந்தித்துவரும் சர்வதேச அழுத்தங்களைக் குறைப்பதற்கு மாத்திரமே இந்தச் சந்திப்பு உதவும்.

வடக்கு - கிழக்கு இணைப்பு, தமிழர் தாயகம் என்று கூட்டமைப்பினர் கதைக்கத் தொடங்கும்போதே கடந்த தேர்தல் புள்ளிவிபரங்களை எடுத்துப்போட தயாராகி வருகிறாராம் ஜனாதிபதி தரப்பு தலைவர் ஒருவர்.

**- ஊர்க்குருவி**

## பிளாஸ்ரிக் போத்தல் மீள்சுழற்சிக்கு அனுமதி

கொழும்பு, ஜூலை 01

பிளாஸ்ரிக் குளிர்பான போத்தல்களை தடை செய்வதற்கு முன் இரு வாரங்களுக்குள் மறுசுழற்சி செய்யுமாறு 3 பெரிய குளிர்பான தயாரிப்பு நிறுவனங்களுக்கு சுற்றுச்சூழல் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

ஆரம்பத்தில் கண்ணாடி போத்தல்களைப் பயன்படுத்திய இந்த மூன்று நிறுவனங்களும் தற்போது சுற்றுச்சூழலுக்கு உகந்த பிளாஸ்ரிக் போத்தல்களை பயன்படுத்துகின்றன. இவற்றை மறுசுழற்சி செய்யும் திட்டத்தை அவர்கள் தொடங்கினாலும், அவற்றில் 10 சதவீதம்கூட மறுசுழற்சி செய்யப்படவில்லை.

எனவே, பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தடைகளின் பட்டியலில் பிளாஸ்ரிக் போத்தல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால், இரண்டு வாரங்களுக்குள் முறையான மறுசுழற்சி திட்டம் எதுவும் முன்மொழியப்படாவிட்டால் அவற்றை தடை செய்ய சுற்றுச்சூழல் அமைச்சு ஆலோசித்து வருகிறது. (ஐ)

## 196 கிலோ மரமஞ்சளுடன் வர்த்தகர் கைது!

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட 196 கிலோ கிராம் மரமஞ்சளுடன் ஒருவரைப் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

மரமஞ்சளைக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்திய லொறியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

செவனகல கிரிஇப்பன் ஆர பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒரு வரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார்.

அவர் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று வியாபாரம் மேற்கொள்ளும் சுற்றுலா வர்த்தகர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## இணையம் மூலம் சிறுமி விற்பனை: 18 பேர் கைது

கொழும்பு, ஜூலை 01

15 வயதான சிறுமியை இணையத்தில் விற்ற விவகாரம் தொடர்பில் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கல்கிஸை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிறுமி சுமார் மூன்று மாதங்களாக இந்த முறையில் பல்வேறு வலைப்பக்கங்கள் மற்றும் சமூக ஊடக பக்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

சமூக ஊடகங்களில் சிறுமியை விற்பனை செய்வதற்காக விளம்பரம் செய்த நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், சிறுமி பல்வேறு நபர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இந்நிலையில், சிறுமியை துஷ்பிரயோகம் செய்தவர்கள் உள்ளிட்ட 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் 16 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

### கல்வி TV CHANNEL-1 — 01.07.2021 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி TV CHANNEL - 2 — 01.07.2021 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
01.07.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆனி 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# அமெரிக்க அழுத்தங்கள்?

றொனால்ட் கே. மக்முலென் (Ronald K. McMullen) 30 வருடங்களுக்கும் மேலாக அமெரிக்க வெளிவிவகார விடயங்களில் அனுபவம் வாய்ந்த இராஜதந்திரி. ஓய்வு பெற்ற பின்னர் அரசறிவியல் துறையில் பல்கலைக்கழங்களில் கற்பித்து வருகின்றார். அண்மையில் இவரின் நேர்காணல் ஒன்று, கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில ஊடகம் ஒன்றில் வெளியாகியிருந்தது.

இதன்போது அவரிடம் இலங்கையின் வெளிவிவகார ( கோட்டாபயவின் நடுநிலை கொள்கை ) கொள்கையை, பைடன் தலைமையிலான புதிய அமெரிக்க நிர்வாகம் எவ்வாறு பார்க்கும் – என்று ஒரு கேள்வி கேட்கப்படுகின்றது. இதற்கு மக்முலென் பின்வருமாறு பதிலளித்திருக்கின்றார். "இந்த பிராந்தியத்தில் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான கடுமையான யுத்தத்தின்போது, அமெரிக்காவின் மிகப் பரந்தளவிலான வெளிவிவகார அணுகுமுறையில் இலங்கை ஒரு விடயமாக இருக்கும்."

அண்மையில், அமெரிக்க காங்கிரஸில் ஒரு பிரதிநிதி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியபோது, அது தொடர்பில் போதிய புரிதலற்று தமிழ் அரசியல்வாதிகள் அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர். அந்த சந்தர்ப்பத்திலும் நாம் அமெரிக்காவின் பரந்தளவிலான உலகளாவிய அணுகுமுறையின் ஓர் அங்கமாகவே இலங்கை விவகாரம் நோக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தோம். அது தவிர, சிலர் ஆசைப்படுவது போன்று, கற்பனைகளை செய்வது போன்று நிலைமைகள் இல்லை என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தோம். மக்கள் உண்மைகளுடன் சீவிக்க வேண்டும் என்னும் அடிப்படையில்தான் ஈழநாடு தொடர்ந்தும் சர்வதேச விவகாரங்களை ஆழமாக ஆய்வு செய்து, விடயங்களை முன்வைத்து வருகின்றது.

அமெரிக்கா நேரடியாக தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக ஒருபோதுமே குரல் கொடுக்காது. இலங்கை தொடர்பான அமெரிக்க அணுகுமுறை எப்போதுமே புதுடில்லியின் ஆலோசனையின் பெயரில்தான் நிகழும். இதுவே, இந்த பிராந்தியத்தின் அரசியல் யதார்த்தம். இதனை ஒருவேளை தமிழர்களில் ஒருபகுதியினர் விரும்பாவிட்டாலும்கூட, இதுதான் நிலைமை. நமக்கு முன்னால் உள்ள யதார்த்தங்களை ஒருபோதுமே நம்மால் மாற்றிவிட முடியாது. ஆனால், அந்த யதார்த்தங்களை விளங்கிக்கொண்டு, எங்களுடைய நலன்களை தந்திரோபாய ரீதியில் வெற்றி கொள்ளவதற்கு நாம் முயற்சிக்கலாம். அது நமக்கு உடனடியாக இல்லாவிட்டாலும் கூட, காலப்போக்கில் நன்மையைத் தரும்.

இந்திராகாந்தி தலைமையிலான இந்தியா, இலங்கை விவகாரத்தில் நேரடியாகத் தலையீடு செய்தது. இதன்போது பகிரங்கமாகத் தமிழ் விடுதலை இயக்கங்களுக்கு பயிற்சியளித்தது, ஆயுதங்களைக் கொடுத்தது. இந்த சூழலில், அமெரிக்காவின் ஆதரவு தங்களுக்கு கிடைக்குமென்று ஜே.ஆர். நம்பியிருந்தார். அந்த நம்பிக்கையின் அடிப்படையில், அப்போதிருந்த அமெரிக்க அதிபர் றொனால்ட் ரீகனை நேரில் சந்தித்தார். உதவி கோரினார். ஆனால், அதிர்ச்சியுடன் நாடு திரும்பினார். ஏனெனில், ரீகனோ, எனது நல்ல நண்பர் இநதிரா காந்தியுடன் பேசுங்கள் என்று கூறி, அனுப்பிவிட்டார். உண்மையில் அன்று இந்தியா, அமெரிக்காவின் எதிர் முகாமான சோவித் யூனியனுடன் கைகோத்திருந்தது. அந்த சந்தர்ப்பத்தில்கூட, இந்தியாவைப் பகைத்து, கொழும்புக்கு உதவி செய்ய அமெரிக்கா விரும்பவில்லை.

இன்று நிலைமைகள் தலைகீழாகிவிட்டன. இன்று இந்தியாவும் அமெரிக்காவும் தவிர்க்க முடியாத மூலோபாய பங்காளிகள். சீனாவை எதிர்கொள்ளும் அமெரிக்காவின் உலகளாவிய மூலோபாயத்தில் இந்தியாவே பிரதான கூட்டாளி. இன்றையநிலையில் புதுடில்லியை கேட்காது அமெரிக்காவினால் தமிழர்களுக்கு உதவ முடியுமா? நிச்சயம் முடியாது. சர்வதேச அழுத்தம் தொடர்பில் முக்கியமாக அமெரிக்காவின் அழுத்தங்கள் தொடர்பில் உரத்துப் பேசுபவர்கள், கட்டாயம் இது தொடர்பில் தங்களின் புத்தியை தீட்ட வேண்டும்.

# 'தள்ளாடும் அரசு'

- அலசுவது **இராஜதந்திரி** -

*அரசாங்கத்தின்மீது பௌத்த மகா சங்கத்தினர் தற்போது கடுமையான விமர்சனங்களை வெளியிட ஆரம்பித்துள்ளனர். வீதிகளில் இறங்கி நாட்டு மக்களை ஒன்று திரட்டி அரசாங்கத்துக்கு எதிராக போராடப் போவதாகவும் எச்சரித்துள்ளனர்.*

*ஒரு சில பௌத்த குருமார்கள் ஏற்கனவே, வீதியில் இறங்கி அரசாங்கத்துக்கு எதிராக கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுடன் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியுள்ளனர். இதுதவிர, கிழக்கில் கல்முனை பகுதியிலும் மக்கள் விடுதலை முன்னணியினரின் ஏற்பாட்டில் தற்போதைய விலைவாசி உயர்வுகள், மற்றும் அரசின் ஏதேச்சையான நடவடிக்கைகள் என்பவை தொடர்பாகவும் தீப்பந்த போராட்டமொன்று திங்கட்கிழமை இரவு நடத்தப்பட்டிருந்தது.*

*இவ்வாறு நாட்டு மக்களின் எதிர்ப்பலைகள் அரசாங்கத்துக்கு எதிராக படிப்படியாக ஆரம்பித்துவரும் தருணத்திலேயே, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட அமைச்சர்கள் தமது கடுமையான அதிருப்தியை அரசின் மீது வெளியிட்டுள்ளனர்.*

*வடக்கு - கிழக்கு மக்கள் ஏற்கனவே தமது அதிருப்தியை சில மாதங்களுக்கு முன்னர் கிழக்கே பொத்துவிலிலிருந்து பொலிகண்டி வரை நடத்திய மாபெரும் பாத யாத்திரை மூலம் வெளிப்படுத்தியிருந்தனர்.*

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், நாட்டில் அரசாங்கத்துக்கு எதிராக பெரும் எதிர்ப்பலை கிளம்ப ஆரம்பித்துள்ளதாகவும் தவறான பாதையில் அரசாங்கம் பயணிக்குமேயானால் நாட்டு மக்களோடு இணைந்து ஆட்சி மாற்றத்துக்கு துணை நிற்போம் எனவும் எச்சரித்திருந்தார்.*

**சீன சார்பு கொள்கை**

*அரசாங்கத்துக்கு எதிராக எதிர்ப்பலைகள் படிப்படியாக தோற்றம்பெற ஆரம்பித்துள்ள இத்தருணத்தில் வெளிநாட்டு உறவுகள் தொடர்பாக இலங்கை அதன் சீன சார்பு கொள்கையினால் சர்வதேச சமூகத்தின் அதிருப்திக்கு உள்ளாகியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.*

*சீனாவினுடைய கம்யூனிஸ போக்கு நீக்கப்பட்டதையும் அதன் பொருளாதார வளர்ச்சியையும் சர்வதேச சமூகம் வேண்டுமானால் வரவேற்கலாம். ஆனால், வல்லாதிக்க விஸ்தரிப்பை பூகோள ரீதியாக சீனா மேற்கொள்வதை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதே தெளிவு. இதன்காரணமாக சீனாவை தங்கியிருக்கின்ற நாடுகள் பெரும் நெருக்கடிகளை சர்வதேச ரீதியாக எதிர்நோக்க வேண்டிய நிலையே பலமடைவதாக இருக்கும்.*

*இலங்கை மூன்று தசாப்தகால யுத்தத்தினால் நலிவுற்றிருந்தமையை "எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம்" என்பது போல தனக்கு சாதகமாக சீனா பயன்படுத்திக்கொண்டது. இலங்கையரைப் பொறுத்தவரை கொழும்பு காலிமுக திடலை அண்டியதாக ஏறத்தாழ மூன்று ஏக்கர் விஸ்தீரணத்தில் சீனாவின்*



*கொழும்பு துறைமுக அபிவிருத்தித்திட்டம் ஒரு பொருளாதார அபிவிருத்தித் திட்டமாக இருக்கலாம். ஆனால், இன்று உலகில் ஒரு செல்வந்த நாடாக இருக்கின்ற சீனாவின் வல்லாதிக்க விஸ்தரிப்பின் சின்னமாகவே கொழும்பு துறைமுக அபிவிருத்தி திட்டம் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதைக் காண முடியும்.*

**சீனாவின் குறிக்கோள்**

*இலங்கை மூன்று தசாப்த கால யுத்தத்தினால் பெரும் பின்னடைவை எதிர்நோக்கியிருந்தது. எனவே, அதன் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு உதவி , ஒத்தாசைகள் தேவைப்படுவது அவசியமே. இருந்தபோதிலும் இலங்கைக்கு உதவி, ஒத்தாசை என்ற ரீதியில் தனது சர்வதேச நலன்களைப் பாதுகாப்பதிலேயே சீனா முழுமூச்சாக இறங்கியுள்ளது.*


*உலகில் சனத்தொகை கூடிய நாடாக இருக்கும் சீனாவுக்கு சிறிய நாடன இலங்கையின் குடித்தொகை அந்நாட்டின் ஒரு பிராந்தியத்தினுடைய சனத்தொகைக்கு ஒப்பானதாகவே இருக்கும். அதிலும் சீனா அமைத்து வருகின்ற கொழும்பு துறைமுக நகரமென்பது கூட ஒரு சீன நகரத்தின் அளவை விட சிறியதாகவே இருக்கமுடியும்.*

*எனவே, சீனாவின் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தியின் அடிப்படை கட்டுமான நிர்மாணங்கள் பூர்த்தியாகிவரும் நிலையிலேயே அதன் சாதக மற்றும் பாதக நிலவரம் குறித்து தென்னிலங்கை மக்கள் விழிப்படைய ஆரம்பித்துள்ளனர். இதன் வெளிப்பாடாகவே ஆட்சியாளர்கள்மீது மக்கள் சீற்றமடை யும் நிலை காணப்படுவதோடு அரசில் அங்கம் வகிக்கின்ற பங்காளிக்கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களும் ஆட்சியாளர்கள் மீது தமது அதிருப்தியை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளனர்.*

*ஓரிரு தினங்களுக்கு முன்னர் அபயராம விகாராதிபதி முருத்தெட்டுவ ஆனந்த தேரர், இன்றைய அரசாங்கம் அதன் பதவிக் காலத்தை முழுமையாக பூர்த்தி செய்யுமா என்பது கூட சந்தேகத்துக்குரியதே என்று குறிப்பிட்டிருந்தார்.*

*இந்நிலையில், அரசாங்கத்துக்குள்ளேயே எரிமலைக் குழம்புபோல புகைவிட ஆரம்பித்திருக்கும் எதிர்ப்பலைகள் எவ்வேளையிலும் ஓர் அரசியல் பிரளயமாக உருமாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே குறிப்பிடலாம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
வாழ்க்கைத்துணைக்கு இன்று இலாபங்கள் கிடைக்கும். செலவுகள் முதலீடுகளாகும். இரகசியத்தைக் காப்பாற்றுவீர்கள். பொருளாதாரத்தில் ஏற்றம் இருக்கும். பொறுமை தேவை.

**இடபம்**
நற்செய்தி வரும். பொழுதுபோக்கில் கவனம் செல்லும். பணிச்சுமை கூடும். முயற்சிகளுக்கு நிறைவான பலன் உண்டு. மனம் விரும்பாத நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டிவரும்.

**மிதுனம்**
எதிலும் தாமதமான போக்கு காணப்படும். கவலை தீரும். எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சருமத்தில் சிறு பிரச்னை ஏற்பட்டு, பிறகு சரியாகும்.

**கடகம்**
பொருட்களைக் கையாளும்போது கவனம் தேவை. வெளிநாட்டு பயண வாய்ப்புகளை ஒத்திப்போட நேரலாம். வம்பினால் வீண் பழி ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

**சிம்மம்**
வியாபாரம் செய்பவர்களுக்கு, எதிர்பாராத செலவு உண்டாகும். எந்த விஷயத்தையும் முடிக்க முடியாமல் திணறிய நிலை மாறும். நண்பர்களுடன் வாக்கு வாதத்தினால் பிரச்னை வந்து விலகும்.

**கன்னி**
பணியை முடிக்க வேண்டுமே என்று சோம்பல் ஏற்படும். ஆயுதங்களை பயன்படுத்தும்போது மிகுந்த கவனமாக இருங்கள். பிரச்னை ஒன்றை மிகவும் சாமர்த்தியமாகக் கையாளுவீர்கள்.

**துலாம்**
கருத்து வேறுபாடு ஒன்று முடிவுக்கு வந்து நிம்மதியளிக்கும். உடல் நிலையில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். உறவினர் மத்தியில் உங்களின் முக்கியத்துவம் கூடும்.

**விருட்சிகம்**
சிக்கல் ஒன்றைத் தீர்த்து மற்றவரின் பாராட்டை பெறுவீர்கள். குறை ஒன்று நீங்குவதற்கான நல்ல செய்தி கிடைக்கும். மற்றவரிடையே முக்கிய நபர் என்று பெயர் எடுப்பீர்கள்.

**தனுசு**
சோதனையிலும் அமைதியைக் கடைபிடித்து வெற்றி பெறுவீர்கள். பணியாளர்கள் செய்யும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தவறான வகையில் தைரியம் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

**மகரம்**
அயராது பாடுபட்டு முன்னேற்றம் அடைவீர்கள். உங்கள் வார்த்தைகள் பலிக்கும் என்பதால் கவனமாகப் பேசுங்கள். நண்பர்களை அளவோடு அனுமதிப்பது நல்லது.

**கும்பம்**
நல்ல பெயர் எடுக்கப்பாடுபடுவீர்கள். கலையார்வம் வரும். தந்தைக்கு ஏற்பட்டிருந்த உடல்நலக் கோளாறுகள் நீங்கும். பய உணர்வு தீருவதால் செயலில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**மீனம்**
செலவுகளுக்கான தடைகள் நீங்கும். பய உணர்வு வேண்டாம். முயற்சியில் சிறு இடையூறு ஒன்று ஏற்பட்டு விலகும். உங்கள் முயற்சிகளை அதிகரிப்பதற்கு ஏற்ப வெற்றி வரும்.

# ஈழத்தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

## திருச்சி முகாம்களை பார்வையிட்ட அமைச்சர் உறுதி



திருச்சி, ஜூலை 01

தமிழகத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை அளிப்பதற்கு சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார் தமிழகத்தின் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கே.எஸ். மஸ்தான்.

திருச்சிவாழவந்தான்கோட்டை மற்றும் கொட்டப்பட்டியிலுள்ள ஈழத்தமிழர்அகதிகள்முகாம்களை செவ்வாய்க்கிழமை பார்வையிட்ட அவர், அங்குள்ள குடியிருப்புகள், கழிப்பறைகள், சமுதாய கூடம் உள்ளிட்ட அனைத்து கட்டடங்களின் வசதிகள், அடிப்படை வசதிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து குறைகளைக் கேட்டறிந்தார். அதன்பின்னர் அகதிகள் மத்தியில் உரையாற்றிய போதே, ஈழத் தமிழர்களுக்கு குடியுரிமையை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளித்தார். தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் இது தொடர்பில் ஏற்கனவே கோரிக்கையை முன்வைத்திருந்தமையையும்அவர்சுட்டிக்காட்டினார்.

தமிழகத்தில் 108 ஈழத் தமிழர் அகதிகள் முகாம்கள் உள்ளன. இங்கு 38 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதுமட்டுமின்றி காவல்துறையில் பதிவு செய்துவிட்டு, முகாம்களைவிட்டு வெளியே வசிக்கும் நிலையில் 13,553 குடும்பங்கள் உள்ளன.

# முன்னாள் அமைச்சர் முறைப்பாடு; சசிகலாமீது பொலிஸ் வழக்கு



சென்னை, ஜூலை 01

முன்னாள் தமிழக அமைச்சர் சி.வி.சண்முகம் அளித்த புகாரின் பேரில் சசிகலாமீது ரோஷணை பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 9ஆம் தேதி, அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், சசிகலா மீது பொலிஸில் புகார் அளித்திருந்தார். திண்டிவனத்தில் உள்ள ரோஷணை பொலிஸ் நிலையத்தில் அளித்த புகாரில், “கடந்த ஜூன் 7ஆம் திகதி சசிகலா குறித்து சில கருத்துகளை ஊடகங்களிடம் பேட்டியாகக் கொடுத்தேன். அதற்கு சசிகலா நேரடியாகப் பதிலளிக்காமல், அடியாட்களை வைத்து கைப்பேசி மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் ஆபாசமாகவும், அநாகரிகமாகவும் பேசியும், பதிவிட்டும் வருகிறார்கள்.

மேலும், கைபேசியில் என்னை அச்சுறுத்தும் வகையில், கொலை மிரட்டல் விடுத்தும் வருகின்றனர். இன்றுவரை சுமார் 500 தொலைபேசி அழைப்புகள் செய்துள்ளனர். இன்னும் கைபேசி, சமூக ஊடகங்கள்மூலம்கொலை மிரட்டல்விடுக்கின்றனர்.

சசிகலா பற்றிப் பேசினால் உன்னையும், உன் குடும்பத்தையும் தொலைத்துவிடுவோம் என மிரட்டும் தொனியில் பேசுகின்றனர். இதற்கு சசிகலாவின் தூண்டுதல்தான் காரணம். எனவே, சசிகலா மற்றும் எனது அலைபேசிக்குக் அழைப்பு எடுத்த மர்ம நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று வலியுறுத்தியிருந்தார்.

இந்த புகார் மீது பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர். இந்த நிலையில் நேற்று சசிகலா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கொலை மிரட்டல், எங்கு இருந்து பேசுகிறோம் என்று குறிப்பிடாமல் அநாகரிகமாகப் பேசுதல், அடுத்தவரைத் தூண்டிவிட்டு கலவரம் ஏற்படுத்தும் வகையில் பேசுதல், தகவல் தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்தி சமூக வலைதளங்களில் அச்சுறுத்தும் வகையிலான தகவலைப் பதிவிடுதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# மனுக்கள்மீது உடனடி நடவடிக்கை; பொலிஸாருக்கு மனித உரிமை பயிற்சி

## தமிழகத்தின் புதிய காவல்துறை இயக்குநர் அறிவிப்பு



சென்னை, ஜூலை 01

தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநராக பொறுப்பேற்றுள்ள சைலேந்திர பாபு, பொதுமக்கள் அளிக்கும் மனுக்களை விசாரித்து 30 நாள்களுக்குள் அறிக்கை வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

தமிழக காவல்துறை தலைமை இயக்குநராக உள்ள திரிபாதியின் பதவிக்காலம் நேற்றுடன் நிறைவடைந்தது. இதையொட்டி புதிய தலைமை இயக்குநராக முனைவர் சைலேந்திரபாபுவை தமிழக அரசு ஜூன் 29ஆம் திகதி நியமித்தது.

இதைத்தொடர்ந்து சென்னை ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் நேற்று புதிய டி.ஜி.பி.பொறுப்பேற்கும் முன்னர், பதவியில் இருந்து ஓய்வு பெறும் டி.ஜி.பி. திரிபாதிக்கு காவல்துறை உயரதிகாரிகள் வாழ்த்து கூறி வழியனுப்பி வைத்தனர்.

முன்னதாக, புதிய டி.ஜி.பி. ஆக பொறுப்பேற்க வந்த சைலேந்திரபாபுவை திரிபாதி தலைமையக வாயில் பகுதியில் வரவேற்றார். பின்னர் இருவரும் காவல்துறையினர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர். இதன் பிறகு புதிய டி.ஜி.பி. ஆக சைலேந்திர பாபு பொறுப்பேற்றார்.

இதன் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவர், “காவல்துறை தலைமை இயக்குநர் பதவி ஏற்றிப்பது எனக்கு கிடைத்த அரிய வாய்ப்பு. இதற்காக தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனது பதவிக்காலத்தில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பாரமரிப்புக்கு அதிக முக்கியத்துவம் தரப்படும். குற்றங்கள் நடைபெறாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்கள் அளிக்கும் மனுக்களில், குறிப்பாக மாநில முதல்வரிடம் கொடுத்த மனுக்கள் மீது 30 நாட்களில் துரித விசாரணை நடத்தி அரசுக்கு அறிக்கை அனுப்பப்படும்,” என்று கூறினார்.

ஈழநாடு



## இலங்கை இந்து மாமன்றத்தால் மட்டக்களப்பில் நிவாரண உதவி

மட்டக்களப்பு, ஜூலை 01

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக போக்குவரத்து தடைப்படுத்தப்பட்டவேளை அன்றாட உணவுக்காக சிரமப்பட்ட மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

பேரவையின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் அகில இலங்கை இந்து மாமன்றத்திடம் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் இரண்டு இலட்சம் ரூபா நிதியுதவியை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைக்கு வழங்கியது.

இதனடிப்படையில் கிரான்குளம், செட்டிபாளையம், களுவன்கேணி உட்பட்ட கிராமங்களுக்கு பேரவையினால் உலருணவுப் பொதிகள்வழங்கப்பட்டன.

பேரவையின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தலைமையில் பேரவையின் செயலாளர் சா.மதிசுதன், பேரவையின் பொருளாளர் ந.புவனசுந்தரம், பேரவையின் இணைப்பாளர் ச.விஜிதரன் ஆகியோர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கினர்.

## மனித நுகர்வுக்கு தகுதியற்ற 2,000 கிலோ இறைச்சி மீட்பு

வவுனியா, ஜூலை 01

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் பாவனைக்குதவாத வகையில் கொண்டு சென்ற 2000 கிலோ கோழி இறைச்சி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டது.

வட பகுதியில் விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட இறைச்சி ஏற்றிய வாகனத்தை சோதனைக்குட்படுத்திய வவுனியா தெற்கு சுகாதாரப் வைத்திய அதிகாரி பணிமனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குறித்த வாகனத்தில் போதியளவு குளிரூட்டி இன்மையால் இறைச்சி பழுதடைந்த நிலையில் காணப்பட்டதையடுத்து அவற்றை கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக வவுனியா தெற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு குறித்த நபரையும், வாகனத்தையும், பாவனைக்குதவாத நிலையில் கைப்பற்றிய இறைச்சியையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## பஸிலுக்காக ஆளும் கட்சியின் 113 எம்.பிக்கள் கையொப்பம்!

கொழும்பு, ஜூலை 01

பஸில் ராஜபக்ஷவை பாராளுமன்ற உறுப்பினராக்க கோரி, ஆளும் கட்சியின் 113 உறுப்பினர்கள் கடிதம் ஒன்றில் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்தக் கடிதம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகத் குமார தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பத்தரமுல்லையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் பஸில் ராஜபக்ஷவை பாராளுமன்றம் வருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பல தடவைகள் அழைப்பு விடுத்திருந்தார் என்றும் ஜெகத் குமார தெரிவித்தார்.

எதிர்வரும் தினங்களில் பஸில் இணக்கம் தெரிவிப்பார் என தாம் நம்புவதாகவும் ஜெகத் குமார குறிப்பிட்டார்.

# சீன மாகாணம் போன்று இலங்கை; மேற்குலகம் இதனை விரும்பாது!

### கோவிந்தன் கருணாகரம் எம்.பி. சுட்டிக்காட்டு

**மட்டக்களப்பு, ஜூலை 01**

**இலங்கை சீனாவின் மாகாணம்போன்று செயல்படுவது மேற்குலக நாடுகளுக்கோ இந்தியாவுக்கோ விரும்பத்தகாத செயலாக உள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.**



வட, கிழக்கில் சீனர்களின் ஆதிக்கத்துக்கு இந்த அரசாங்கம் இடமளிக்கின்றது என்றால் நேரடியாக அது இந்தியாவின் பாதுகாப்பை பாதிக்கும் என்னும் வகையில் நேரடியாக இந்தியாவின் பகையை சம்பாதிக்கக்கூடிய நிலையையே ஏற்படுத்தி வருகின்றது எனவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பில் உள்ள அவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொரோனா காரணமாக இந்த நாட்டின் நிலைமை மிக மோசமாக சென்றுகொண்டிருக்கின்றது. தொற்றுநோய்க்கான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே ஒரு அறிக்கை விடுகின்றார். கோவிட் செயலணிக்கு பொறுப்பான இராணுவத்தளபதி சவேந்திரா சில்வா வேறு விதமான அறிக்கை விடுகின்றார். சுகாதார அமைச்சர் இன்னுமோர் அறிக்கை விடுகின்றார். நாட்டு மக்கள் தற்போதைய நிலையில் குழப்பான நிலையிலிருந்து கொண்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளேயின் அறிக்கையின்படி அல்பா, டெல்டா சில வாரங்களில் பரவி ஆயிரக்கணக்கானோர் இறக்கும் நிலையேற்படும் என்று கூறுகின்றார்.முதலாம் இரண்டாம் அலையை ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தி தொற்றை ஓரளவு கட்டுப்படுத்தினார்கள். மூன்றாவது அலையில் பயணக்கட்டுப்பாடு என்று கூறி ஒரு நகைச்சுவையான நாடகம் நடைபெற்று வருகின்றது.

ஐரோப்பிய நாடுகள்,மத்திய கிழக்கு நாடுகள் சில இலங்கையை தங்களது சிவப்பு வலயங்களுக்குள் உட்படுத்தியுள்ளன. உயர்கல்விக்கு செல்பவர்களும் தொழில்வாய்ப்புகளை தேடுபவர்களும் விடுமுறையில் வந்தவர்களும் மீண்டும் செல்லமுடியாத நிலையில் உள்ளனர்.

அண்மையில் பொசன் விடுமுறையை முன்னிட்டு ஜனாதிபதியினால் பொது மன்னிப்பளிக்கப்பட்டு கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டிருந்தனர். அதில் 16 தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.இந்த அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சந்திப்புக்கும் இடையில் தொடர்புகள் இருக்கின்றன.

இலங்கைக்கு பலவிதமான அழுத்தங்கள் மேற்குநாடுகளிலிருந்து வந்துகொண்டிருக்கின்றன. இலங்கை அரசாங்கம் சீனாவை முற்றுமுழுதாக நம்பி சீனாவின் வழித்தடத்தில் ஒரு சீன மாகாணம் போன்று செயற்படுவது மேற்குலக நாடுகளுக்கோ இந்தியாவுக்கோ விரும்பத்தகாத செயலாக இருக்கின்றது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவில்லையென்றால் ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை மீள்பரிசீலனை செய்யவேண்டும் அல்லது நிறுத்தவேண்டும் என்ற அழுத்தம் காரணமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும்,பயங்கரவாத தடைச்சட்டத்தை மீள்பரிசீலனை செய்யவேண்டும்.

இந்த நிலையில்தான் பாராளுமன்றத்தில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஒரு அறிக்கை விட்டிருந்தார். கடந்த 16ஆம் திகதி ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையே சந்திப்பொன்றுக்கு ஏற்பாடாகியிருந்த நிலையில் அது பிற்போடப்பட்டிருந்தது. கடந்த 24ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பேசிய இரண்டு தினங்களில் 16அரசியல் கைதிகளை விடுதலை செய்யப்பட்டிருந்தனர். இரண்டு தினங்களில் இந்த அரசியல் கைதிகள் விடுவிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

பேச்சு நடைபெற்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அழுத்தம் காரணமாக கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்று கூறப்படும் என்ற காரணத்தினால் பேச்சு பிற்போடப்பட்டு கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

## பொகவந்தலாவை சுகாதார பிரிவில் மேலும் 42 பேருக்கு கொரோனா!

கொழும்பு, ஜூலை 01

நுவரெலியா மாவட்டத்தில் பொகந்தலாவை மற்றும் அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பகுதிகளில் மேலும் 57 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொகவந்தலாவை சுகாதாரப்பிரிவில் நேற்று வெளியான பி.சி.ஆர் முடிவுகளின்படி 42 பேருக்கும், அம்பகமுவ பொது சுகாதார வைத்திய அதிகாரப்பிரிவுக்கு உட்பட்ட சமனலகம, ஹற்றன் சுற்றுப்புற வீதி , புறுட் ஹில், கந்தையா கட்டடம் உள்ளிட்ட பகுதிகளில் 15 பேருக்கும் இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது.

இந்த தகவலை பொதுசுகாதார பரிசோதகர் இராமையா பாலகிருஸ்ணன் உறுதிப்படுத்தினார்.

தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணியவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும்,ஹற்றன் பகுதியில் தொற்றாளர்களுடன் தொடர்பை பேணிய 16 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக ஹற்றன் பொதுசுகாதார பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

## 176 கடலாமைகள் 20 திமிங்கிலம், 4 சுறா எக்ஸ்பிரஸ் பேர்ள் விபத்தால் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 01

எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றி மூழ்கிய அனர்த்தத்தை தொடர்ந்து, இதுவரை 176 கடலாமைகள், 20 திமிங்கிலங்கள், 4 சுறாக்கள் உயிரிழந்தன.

சட்டமா அதிபர் திணைக்களம் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு இதனை அறிவித்துள்ளது.

## தரமற்ற முகக்கவசங்களை விற்பனை செய்ய தடை!

கொழும்பு, ஜூலை 01

மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் தரச்சான்றிதழ் அற்ற தரமற்ற முகக்கவசங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சந்தைகளில் தரமற்ற முகக்கவசங்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவுவதை கட்டுப்படுத்தும் நோக்கில் அணியப்படும் முகக்கவசத்துக்கு தரச்சான்றிதழ் கட்டாயம் எனவும் குறித்த அதிகார சபையின் தலைவர் ஓய்வு பெற்ற ஜெனரல் ஷாந்த திஸநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

## வவுனியா இ.போ.ச சாரதிக்கு கொரோனா!

வவுனியா, ஜூலை 01

வவுனியா இலங்கை போக்குவரத்து சபையின் சாரதிக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு சென்றபோது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போதே அவருக்கு கொரோனா தொற்று உள்ளமை தெரியவந்துள்ளது.

இந் நிலையில் அவருடன் தொடர்பை பேணிய இ.போ.ச ஊழியர்கள் மூவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பயணத் தடையின் பின்னர் போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வட மாகாணத்தில் இ.போ.ச மற்றும் தனியார் பஸ் சாரதி நடத்துநர்கள் தடுப்பூசி போடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



## யாழ்.மாவட்ட செயலகத்துக்கு வந்தார் பாகிஸ்தான் தூதுவர்!

யாழ்ப்பாணம், ஜூலை 01

இலங்கைக்கான பாகிஸ்தான் நாட்டுத் தூதுவர் மொகமட் சாட் கட்டாக் நேற்று புதன்கிழமை யாழ். மாவட்ட செயலகத்துக்கு வந்தார்.

யாழ்.மாவட்ட செயலாளர் க.மகேசன் தலைமையிலான குழுவினர் அவரை வரவேற்று, கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும், இந்த சந்திப்பில் கலந்து கொண்டார்.

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய அபிவிருத்தி, சமகால நிலைமைகள் தொடர்பில் பாகிஸ்தான் தூதருக்கு காணொலி முறையில் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் திணைக்கள தலைவர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) முரளிதரன், திணைக்கள தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ரயில் கட்டுப்பாட்டாளர்,சாரதிகளின் பணிப்பகிஷ்கரிப்பு இடைநிறுத்தம்!

கொழும்பு, ஜூலை 01

ரயில் கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் சாரதிகள் சங்கத்தினரால் நேற்றுக் காலை காலை 8 மணி முதல் ஆரம்பிக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு நேற்று பிற்பகலில் நிறைவுக்கு வந்துள்ளது.

இலத்திரனியல் ரயில் பயணச்சீட்டு அறிமுகப்படுத்துவதில் இடம்பெற்றிருக்கும் நிதி மோசடியை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ரூ.4.4 பில்லியன் மதிப்பிலான ரயில் டிஜிற்றல் ரிக்கெட் செயல்முறை, ஒரு வெளிநாட்டு நிறுவத்துடன் கூட்டாக மேற்கொள்ளப்படுவது நிதி மோசடிக்கு வழியேற்படுத்தும் என தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டுகின்றன.

திட்ட அறிக்கைகளை தயாரிக்கவே 27 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் செலவிடப்பட்டுள்ளதாக அவை குற்றம்சாட்டியிருந்தன.

போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகேயுடன் நடத்தப்பட்ட பேச்சுகளை அடுத்து, பணிப்புறக்கணிப்பை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### மிருகக்காட்சிசாலைகளில் உள்ள

## சகல விலங்குகளுக்கும் கொரோனா பரிசோதனை

கொழும்பு, ஜூலை 01

நாட்டிலுள்ள அனைத்து மிருகக்காட்சிசாலைகளில் உள்ள விலங்குகளுக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ரிதிகம சபாரி மற்றும் பின்னவல சரணாலயத்தில் உள்ள விலங்குகளுக்கு உடனடியாக கொரோனா பரிசோதனையை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் வன ஜீவராசிகள் அமைச்சர் குறிப்பிட்டார்.

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் உள்ள சிங்கங்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

# கோவிட்-19 தொற்றை கட்டுப்படுத்த இதுவரை 262 பில்லியன் ரூபாய் செலவு

### பிரதமர் தலைமையிலான கூட்டத்தில் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 01**

**கோவிட்-19 தொற்றை கட்டுப்படுத்துவதற்காக 2020ஆம் ஆண்டு முதல் இதுவரை அரசாங்கம் 26 ஆயிரத்து 200 கோடி ரூபாயை செலவிட்டுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்ற நிதி அமைச்சின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.**

நிதி அமைச்சர் என்ற வகையில் அமைச்சுக்குரிய அனைத்து நிறுவனங்களதும் தற்போதைய நிலை மற்றும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் பிரதமர் இதன்போது கவனம் செலுத்தினார்.

நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகலவினால் இதன்போது 'சவாலுக்கு மத்தியில் சுபீட்சத்தை நோக்கி' என்ற நிதி அமைச்சின் முன்னேற்ற மற்றும் எதிர்கால நோக்கு முன்வைக்கப்பட்டது.

கோவிட் முதலாவது மற்றும் இரண்டாவது அலைகளை அரசாங்கம் வெற்றிகரமாக கட்டுப்படுத்தியதாக தெரிவித்த எஸ்.ஆர்.ஆட்டிகல, சமூக பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்தி ஏப்ரல் மாதம் முதல் ஆரம்பமான மூன்றாவது அலைக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்து வருவதாக சுட்டிக்காட்டினார்.

இந்த கடினமான சூழ்நிலையிலும் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் உள்ளிட்ட நிவாரணம் பெற தகுதியான மக்களுக்காக பிரதமரின் ஆலோசனைக்கமைய நிதி அமைச்சின் ஊடாக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த எஸ்.ஆர்.ஆட்டிகல, 2019ஆம் ஆண்டு தீர்க்கப்படாதிருந்த 42 ஆயிரத்து 300 கோடி ரூபாய் நிலுவை தொகையை செலுத்திய பின்னரே கடந்த வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

வட்டி விகிதத்தை குறைத்து கடன் நிவாரணங்களை வழங்கியும் பணவீக்கத்தை 4 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக பேணுவதற்கு முடிந்ததாகவும், கடந்த மே மாதம் அது 6.1 சதவீதம் அல்லது 6.2 வரை அதிகரித்த போதிலும் அதனை குறைப்பதற்கு நிதி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக எஸ்.ஆர்.ஆட்டிகல சுட்டிக் காட்டினார்.

பரவலாக்கப்பட்ட நிதியிலிருந்து இதுவரை அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ள அபிவிருத்தி திட்டங்கள் 11 ஆயிரம் ஆகும் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் கொடுப்பனவு வழங்கப்படும் சகல மக்களுக்கும் 5000 ரூபாய் கொடுப்பனவு நான்கு முறை வழங்கப்பட்டுள்ளதாக இதன்போது கருத்து தெரிவித்த சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. நீல் பண்டார ஹபுஹின்ன தெரிவித்தார்.

500 உற்பத்தி கிராமங்களை உருவாக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள் ளப்படும் எனவும் நீல் பண்டார ஹபுஹின்ன சுட்டிக்காட் டினார்.

கொவிட் நிலைமைக்கு மத்தியில் வீழ்ச்சியடைந்த வர்த்தக நடவடிக்கைகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வங்கிகளுடன் கலந்துரையாடி வட்டி விகிதத்தை குறைத்து கடன் நிவாரணங்களை வழங்குவதற்கு முடிந்ததாக நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

வெளிநாட்டு முதலீடுகளை நாட்டிற்குள் ஈர்ப்பதற்கு நிதித் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருவதாக தெரிவித்த ரத்நாயக்க, 2022 ஜனவரி மாதமளவில் தேசிய கடன் பாதுகாப்பு நிறுவனமொன்றை நாட்டில் நிறுவுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

2020-2024 காலப்பகுதியில் பங்குச்சந்தையில் புதிதாக 500 நிறுவனங்களை பட்டியலிடுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி வெவ்வேறு கருத்துக்களை முன்வைப்பினும் இதுவரை வெளிநாட்டு கடன்களை முறையாக செலுத்த முடிந்துள்ளதாகவும், அதே போன்று எதிர்காலத்திலும் அக்கடன் தவணைகளை எவ்வித தாமதங்களும் இன்றி செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் லக்ஷ்மன் தெரிவித்தார்.

நிதி அமைச்சின் பல்வேறு இடங்களில் பரந்து காணப்படும் நிறுவனங்களை மக்களின் வசதிக்காக ஒரே கட்டிடத் தொகுதிக்கு கொண்டு வருவது தொடர்பில் ஆராயுமாறு பிரதமர் இதன்போது நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகலவுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்த கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான அஜித் நிவாட் கப்ரால், ஷெஹான் சேமசிங்க, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமர் அலுவலக பணிக்குழாம் பிரதானி யோஷித ராஜபக்ஷ, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன உள்ளிட்ட அரச வங்கி மற்றும் நிதி அமைச்சிற்குரிய நிறுவனங்களின் பிரதானிகள் பலர் கலந்து கொண்டனர்.

## ஒரே நாளில் அதிகளவு நாணயத்தாள்கள் அச்சிட்டுள்ளது இலங்கை மத்திய வங்கி

கொழும்பு, ஜூலை 01

இலங்கை மத்திய வங்கி ஒரே நாளில் மிக உயர்ந்த நாணயத்தாள்களை அச்சிட்டுள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகமான டெய்லிமிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

வரி வருமானம் குறைந்து வருவதாலும் கோவிட்-19 வைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கான முடக்கம் மற்றும் வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான செலவினங்கள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வாரம் 2 ஆயிரத்து 300 கோடி ரூபாய் நாணயத்தாள்களை அச்சிட்ட பின்னர், கடந்த திங்கட் கிழமை மேலும் 20 ஆயிரத்து 845 கோடி ரூபாய் நாணயத் தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன.

மத்திய வங்கியின் மொத்த திறைசேரி முறிகளில் ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் எடுத்துக்கொண்டது என்று அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## கொரோனா தொற்றில் இருந்து மேலும் 2,481 பேர் பூரண குணம்

கொழும்பு, ஜூலை 01

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 2 ஆயிரத்து 481 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து இதுவரை 2 இலட்சத்து 25 ஆயிரத்து 952 பேர் பூரண குணமடைந்துள்ளனர்.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 57 ஆயிரத்து 225 ஆக அதிகரித்துள்ளது.அதேநேரம் கொரோனா தொற்றினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 30 ஆக பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் கொரோனா உச்சம் தொடுகிறது!

## உள்ளூர் மற்றும் பிரதான வீதிகளில் சுகாதார பரிசோதகர்கள் களப்பணியில்

**மட்டக்களப்பு, ஜூலை 01**

**சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எம்.எம்.அல் அமீன் றிசாடின் வேண்டுகோளுக்கிணங்க பிரயாணக் கட்டுப்பாடு வரையறை தளர்த்தப்பட்டாலும் கிழக்கில் உக்கிரமடைந்து வரும் கொரோனா அலையை கட்டுப்படுத்தும் நோக்கில் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் உள்ளூர் மற்றும் பிரதான வீதிகளில் களப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.**

மக்களின் சுகாதார நலன் கருதி சந்தைகள், பொது இடங்கள் மற்றும் பொது வீதிகள் போன்ற இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு மேற்பார்வை குழு நியமிக்கப்பட்டு களச் செயல்பாடுகள் நாளந்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இக்களப்பணிக்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பல்நோக்கு அபிவிருத்தி செயலணி குழுவும் கலந்து கொண்டு சுகாதார வழிமுறை களை கண்காணித்து வருகின்றனர்.





## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜூலை 01

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று புதன்கிழமை சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களினால் 'எங்கே எங்கே உறவுகள் எங்கே', "கையில் ஒப்படைக்கப்பட்ட உறவுகள் எங்கே" என்று கோஷங்களை எழுப்பியவாறும் பதாதைகளை தாங்கியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 2021 வாக்காளர் கணக்கெடுப்பு யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 01

2021 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் கணக்கெடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட செயலாளர் க.மகேசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் செயலகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது;

நாட்டின் தற்போதைய நிலமை காரணமாக வீடுவீடாக பி.சீ படிவங்களை வழங்கி கணக்கெடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

கடந்த ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் தேவையான மாற்றங்களை மட்டும் மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் இடாப்பில் ஜூன் முதலாம் திகதி 18 வயதை நிறைவு செய்தமை, புதிதாக வதிவுக்கு வந்தமை போன்ற காரணங்களால் புதிதாக பெயர்கள் சேர்க்கப்படவேண்டிய வர்கள் அல்லது இறப்பு, வதிவு மாறிச் சென்றமை போன்ற காரணங்களால் பெயர்களை நீக்க வேண்டியவர்கள் வீடுகளில் இருந்தால் 2021.07.22 ஆம் திகதிக்கு முன் கிராம அலுவலரை நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு 2021 ஈ.ஆர். படிவத்தைப் பெற்று முழுமைப்படுத்தி மீள கையளித்தல் வேண்டும்.

பிரதேச செயலகங்களிலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணையத்தளமான elections.gov.lk என்ற முகவரியில் குறித்த படிவத்தினை பெற்று முழுமைப் படுத்தி கிராம அலுவலரிடம் சமர்ப்பிக்க முடியும்.

2020 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் பெயர் பதியப்படாத முழுமையாக அல்லது பகுதியளவில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தாம் வதியும் கிராம அலுவலரிடம் அல்லது தேர்தல்கள் அலுவலகத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் உரிய கிராம அலுவலர் பிரிவுகளில் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் - என்றுள்ளது.

## பாணின் விலை உயரும்

கொழும்பு, ஜூலை 01

கோதுமை மாவின் விலை அதிகரித்ததால், அடுத்த வாரத்திலிருந்து பாணின் விலை அதிகரிக்கவுள்ளதாக அனைத்து இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

செரண்டிப் நிறுவனம் கடந்த வாரம் முதல் ஒரு கிலோ மாவின் விலையை 18 ரூபாய் அதிகரித்துள்ளது. இதனால் ஒரு இறாத்தல் பாணின் விலையை 10 ரூபாயால் அதிகரிக்க வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

டீசல் விலை அதிகரிப்பு காரணமாக, பாண் தவிர்ந்த வெதுப்பக பொருட்களின் விலை 5-10 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

## தலைமன்னார் பகுதியில் பி.சி.ஆர். பரிசோதனை

மன்னார், ஜூலை 01

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்த 'கொரோனா' தொற்று காரணமாக தலைமன்னார் பியர் மேற்கு மற்றும் தலைமன்னார் பியர் கிழக்கு ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவுகள் கடந்த வாரம் முடக்கப்பட்ட நிலையில் அப்பகுதியில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை தலைமன்னார் பியர் பகுதியில் 62 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் குறித்த இரு கிராம அலுவலகர் பிரிவுகளும் மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டன. அங்கு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை ஆகியவை இணைந்து பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுத்தனர்.

மொத்தம் 368 நபர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மாதிரிகள் கொழும்பு முல் லேரியா வைத்தியசாலைக்கு மேலதிக பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## நல்லாட்சி காலத்திலேயே சீன நிறுவனத்தின் கடலட்டை பண்ணை அமைக்க அனுமதி!

### அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் அமைந்த கடந்த நல்லாட்சி காலத்திலேயே சீன நிறுவனத்திற்கு கடலட்டை பண்ணை அமைக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, கௌதாரிமுனை பிரதேசத்தில் சீன நிறுவனம் ஒன்றினால் அமைக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணை தொடர்பாக நேற்று மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கையிலேயே கடற்றொழில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஆட்சி அமைத்திருந்த அப்போதைய அரசாங்கத்திடம் அவசியமான அனுமதிகளைப் பெற்றுக் கொண்ட குறித்த சீன நிறுவனம், அரியாலைப் பகுதியில் தனியார் காணி ஒன்றை குத்தகைக்கு பெற்று கடலட்டை குஞ்சு இனப்பெருக்க நிலையம் ஒன்றை ஆரம்பித்திருந்தது.

பின்னர், அரியாலை கடல் பிரதேசத்தில் கடலட்டை குஞ்சு பராமரிப்பு நிலைத்தினையும் அமைத்து செயல்பட்டு வந்தது.

இந்நிலையில், தற்போது கௌதாரிமுனையில் கடலட்டைப் பண்ணை ஒன்றினையும் அமைத்துள்ளார்கள்.

கடலட்டைப் பண்ணைகள் தொடர்பான அனுமதிகள் நக்டா எனப்படும் தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில், குறித்த சீன நிறுவனத்திற்கான அனுமதிகள் நக்டா நிறுவனத்தின் கொழும்பு தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

இது டர்பாக ஆராய்ந்து பூரணமான அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

அதேவேளை, விரைவில் குறித்த பிரதேசத்திற்கு நேரடியாக விஜயம் செய்து பிரதேச கடற்றொழிலாளர் சங்கம் உட்பட சம்மந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி, குறித்த சீன நிறுவனம் தொடர்பாக இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படும்-என்றார்.

## ஆதிவாசிகளின் தலைவர் தடுப்பூசி செலுத்தினார்



கொழும்பு, ஜூலை 01

ஆதிவாசிகளின் தலைவர் உருவாரிகே வன்னில அத்தோ நேற்று கோவிட் -19 தடுப்பூசி செலுத்திக் கொண்டார்.

நேற்று காலை கண்டியில் உள்ள தலதா மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தடுப்பூசி செலுத்தும் நிகழ்வில், ஆதிவாசிகளின் தலைவர், ஆதிவாசி மக்கள் குழுவுடன் இணைந்து தடுப்பூசி பெற்றுக் கொண்டார்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் கண்டியில் நடக்கும், வருடாந்திர எசல பெரஹறவின் தொடக்க விழாக்களில் பங்கேற்கவுள்ளதால் அவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

வருடாந்திர பெரஹறவில் பங்கேற்பாளர்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தடுப்பூசி போடப்பட்டது.

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் தகவல் படி, 925,242 பேர் அஸ்ட்ரா செனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றுள்ளனர், 375, 784 பேர் 2 ஆவது டோஸைப் பெற்றுள்ளனர். சினோபார்ம் தடுப்பூசியின் முதல் டோஸை 1,657, 741 பேர் பெற்றுள்ளனர், கிட்டத்தட்ட 605, 116 பேர் 2 ஆவது டோஸைப் பெற்றுள்ளனர்.

ஸ்புட்னிக் 5 தடுப்பூசியின் முதல் டோஸை 114, 795 பேர் பெற்றுள்ளதாகவும், 14,425 பேருக்கு 2 வது டோஸ் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு நிறைவு:

# நாட்டை ஆளும் ஒரே சக்தியின் வியப்பூட்டும் செல்வாக்கு



**கட்சி கொள்கைகளுக்கு எதிராக யாராவது செல்கிறார்கள் என்றால், இரகசியமான தடுப்புக்காவல் மற்றும் துன்புறுத்தல்களி லிருந்தும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அவர்கள் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும். கடந்த ஆண்டு நடிகை ஃபேனுக்கும் இதுதான் நடந்தது.**



சீனா 1949 ஒக்ரோபர் 1 முதல் ஒரே கட்சியால் ஆளப்படுகிறது. அதுதான் சீன கம்யூனிஸ்ட் கட்சி. தலைவர் மாவோவின் காலத்திலிருந்து நாட்டை பொருளாதார அதிகார மையமாக மாற்றும் திசையில் கட்சி செயல்பட்டது. ஆனால், அந்தப் பாதையில் எந்த எதிர்ப்பையும் கட்சி சகித்துக்கொள்ளவில்லை. கருத்து வேறுபாடுகளை வேருடன் கிள்ளி எறிந்தது.

சீன கம்யூனிஸ்ட் கட்சி நூறாண்டு நிறைவைக் கொண்டாட இருக்கும் நிலையில், நாட்டின் முன்னேற்றத்தில் இந்தக்கட்சியின் பங்கு என்ன, அது சீனாவை எவ்வாறு வழி நடத்துகிறது என்பதைப் பார்ப்போம்.

### சுருக்கமான விவரம்

அரசு, பொலிஸ் முதல் இராணுவம் வரை நாட்டின் முழு கட்டுப்பாடும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் கையில் உள்ளது.

சுமார் 90 மில்லியன் (9 கோடி) உறுப்பினர்களுடன், இது ஒரு கோபுரம் போல ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. பொலிட் ப்யூரோ மற்றும் அனைத்திற்கும் மேலாக ஜனாதிபதி ஷி ஜின்பிங் உள்ளார்.

தேசிய மக்கள் காங்கிரஸ் என்ற பாராளுமன்றம் இருக்கும்போதும் அது கட்சித் தலைமையால் எடுக்கப்படும் முடிவுகளை கேள்வி ஏதும் இல்லாமல் ஆமோதிக்கிறது.

கருத்து வேறுபாடுகளை ஒடுக்க, ஊடகங்கள் மற்றும் இணையத்தின் மீதும் கட்சிக்கு இறுக்கமான பிடி உள்ளது.

சீனா மீதான பற்று என்பது கட்சி மீதான பற்றுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. அதே நேரத்தில் அரசின் பன்முகத்தன்மை மற்றும் ஜனநாயக நெறிகள், தேசிய ஒத்திசைவு மற்றும் வளர்ச்சிக்காக நிராகரிக்கப்படுகின்றன.

### ஒரு கட்சி அரசு

சீனாவில் ஒரு கட்சி அரசுதான் செயல்படுகிறது என்று சொல்லலாம்.

கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பங்கு அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ளது. பல சிறிய கட்சிகள் இருக்கும்போதும் கூட, அவைகள் கம்யூனிஸ்ட்களை ஆதரிக்க கடமைப்பட்டுள்ளன.

நிறுவுநர் மாவோ சேதுங்கின் கீழ், கம்யூனிஸ்ட் கட்சி கடுமையான சர்வாதிகார சோஷலிசத்தை அமுல்படுத்தியது. ஆயினும்கூட 'முன்னேறிச் செல்வதற்கான நீண்ட பாய்ச்சல்' (The Great Leap Forward) என்ற இயக்கத்தின் பொருளாதார தோல்வி, நாட்டில் ஏற்பட்ட பஞ்சம் மற்றும் கலாசாரப் புரட்சியின்போது ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக இலட்சக் கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.

1976 இல் மாவோ இறந்த பிறகு, டெங் சியாவ் பிங் அமுல்செய்த சீர்திருத்தங்களுடன் நாடு மெதுவாக தேக்க நிலையிலிருந்து வெளியே வந்தது.

தற்போதைய ஜனாதிபதி ஷி ஜின்பிங் 2012 இல் ஆட்சிக்கு வந்தார். சீனா உலகளாவிய வல்லரசாக உருவெடுப்பதை அவர் வழிநடத்தி வருகிறார்.

### மேலிருந்து கட்டுப்படுத்தப்படும் கோபுரம்

சீனாவின் மக்கள்தொகையில் சுமார் 7% பேர் கட்சியின் உறுப்பினர்கள். அரசியல், வணிகம் அல்லது பொழுதுபோக்கு போன்ற எதுவாக இருந்தாலும் தொழில் ஏணியில் ஏற விரும்பும் எவரும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு விசுவாசமான உறுப்பினராக இருப்பது அவசியம்.

இலத்திரணியல் வர்த்தக நிறுவனமான அலிபாபாவின் ஜாக் மா, தொலைத் தொடர்பு நிறுவனமான ஹவாய் நிறுவுநர் ரென் ஷெங்ஃபி, அல்லது நடிகை ஃபேன் பிங் பிங் போன்ற பிரபலங்களுக்கும்கூட இது பொருந்தும்.

கட்சி கொள்கைகளுக்கு எதிராக யாராவது செல்கிறார்கள் என்றால், இரகசியமான தடுப்புக்காவல் மற்றும் துன்புறுத்தல்களிலிருந்தும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அவர்கள் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும். கடந்த ஆண்டு நடிகை ஃபேனுக்கும் இதுதான் நடந்தது.

கட்சி அமைப்புகள், உள்ளூர் மட்டத்திலிருந்து தொடங்கி, தலைமை வரை அனைத்தையும் தேர்ந்தெடுக்கின்றன. தேசிய கட்சி காங்கிரஸ் ஒரு மையக் குழுவைத் தேர்ந்தெடுக்கிறது. இந்தக்குழு பொலிட் ப்யூரோவை தேர்வு செய்கிறது.

இந்தத் தேர்தல்கள் வழக்கமாக முன்பே தீர்மானிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன, உண்மையான வலு பொலிட் ப்யூரோவிடம் உள்ளது.

அனைத்திற்கும் மேலே இருக்கும் அதிபர் ஷி ஜின்பிங், வாழ்நாள் முழுவதும் ஜனாதிபதியாக இருப்பதற்கான வழியை 2017ஆம் ஆண்டில், கட்சி ஏற்படுத்திக்கொடுத்தது.

அவரின் பெயரையும் சித்தாந்தங்களையும் அரசியல் சாசனத்தில் பொறிக்கவும் கட்சி வாக்களித்தது. அவர் கட்சி நிறுவுநர் மாவோ சேதுங்கின் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

### சக்திவாய்ந்த பொலிட் ப்யூரோ

அரசு, காவல்துறை, இராணுவம் போன்ற அனைத்துமே கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளன.

பொலிட் ப்யூரோ, கட்சி வரிசை சரியாக செயல்படுவதை உறுதிசெய்கிறது மற்றும் மூன்று முக்கிய அமைப்புகளையும் அது கட்டுப்படுத்துகிறது:

- மாகாண சபை
- மத்திய ராணுவ ஆணையம்
- தேசிய மக்கள் காங்கிரஸ் அல்லது பாராளுமன்றம்.

மாகாண சபை என்பது பிரதமரின் தலைமையிலான அரசாகும். தற்போது பிரதமராக இருக்கும் லி கெக்கியாங், பதவியில் அதிபருக்கு கீழே இருப்பவர்.

நாடு முழுவதும் கட்சி கொள்கைகளை செயல்படுத்துவதே அதன் பணி. உதாரணமாக தேசிய பொருளாதார திட்டம் மற்றும் அரசின் பட்ஜெட்டை நிர்வகித்தல் போன்றவை.

ராணுவத்திற்கும் கட்சிக்கும் இடையிலான தொடர்பு இரண்டாம் உலகப் போருக்கும் அதன் பின்னர் நடந்த உள்நாட்டுப் போருக்கும் முந்தையது. சீனாவின் ஆயுதப் படைகளை வழிநடத்தும் இராணுவ ஆணையம், இந்த நெருக்கமான உறவுகளை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

நாட்டின் அணு ஆயுதங்கள் மற்றும் 2 மில்லியனுக்கும் அதிகமான வீரர்களைக்கொண்ட உலகின் மிகப்பெரிய இராணுவமும், இதன் கட்டுப்பாட்டில் உள்ளது.

### மக்கள் கருத்துகள் மீது இறுக்கமான பிடி

சீனாவில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி, கருத்து வேறுபாட்டை பொறுத்துக்கொள்ளாது. உண்மையான எதிர்க்கட்சிகள் எதுவும் அங்கு அனுமதிக்கப்படுவதில்லை.

அரசை விமர்சிப்பவர்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் ஆபத்து நிலவுகிறது. ஆட்சியாளர்களுக்கு எதிராகப் பேசுபவர்கள் மீதான அடக்குமுறை குறைவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

அதிபர் ஷி ஜின்பிங் ஆட்சியின் கீழ் மனித உரிமை ஆர்வலர்கள் மீதான ஒடுக்குமுறை தீவிரமடைந்துள்ளது. இந்த நடவடிக்கைகள் கட்சி உறுப்பினர்களையும் விட்டுவைக்கவில்லை.

ஒரு காலத்தில் சக்தி வாய்ந்த பிராந்திய கட்சி தலைவராக இருந்த போ ஜிலாய், ஊழல் மற்றும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தவர் என 2012 ஆம் ஆண்டில் ஒரு விசாரணையில் நிரூபிக்கப்பட்டு அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

தான் மனித உரிமைகளை நிலைநிறுத்துவதாக சீனா வலியுறுத்துகிறது. கூடவே இலட்சக்கணக்கான மக்களை வறுமையிலிருந்து வெளியே கொண்டுவருவது தனிநபர் சுதந்திரத்தைவிட முக்கியமானது என்று கூறி கருத்து வேறுபாடுகளை கடுமையாக ஒடுக்கும் தனது போக்கை நியாயப்படுத்துகிறது.

சமூக ஊடகங்கள் உட்பட எல்லாவிதமான ஊடகங்களும் இணையமும் இறுக்கமாக கட்டுப்படுத்தப்படுகின்றன. சீனாவின் "கிரேட் ஃபயர்வால்" என்ற இணைய தணிக்கை, பல மேற்கத்திய செய்தி வலைத்தளங்கள், கூகுள், பேஸ்புக், யூ ரியூப் மற்றும் ருவிட்டர் போன்றவைகளின் அணுகலைக் கட்டுப்படுத்துகிறது.

அன்றாட வாழ்க்கையின் டிஜிட்டல்மயமாக்கலானது, மேம்பட்ட கண்காணிப்பு தொழில்நுட்பங்களை செயல்படுத்த கட்சியை அனுமதிக்கிறது. மக்களின் விசுவாசத்தை கண்காணிக்கும் 'சோஷியல் க்ரெடிட் சிஸ்டமும்' இதில் அடங்கும்.

ஊடகங்களின் மீதான முழுக்கட்டுப்பாடு, பொது மக்களின் கருத்தை திசைதிருப்பவும் கட்டுப்பாட்டை அமுல்படுத்தவும் கட்சிக்கு உதவியுள்ளது.

**- பி.பி.சி.**

# ஜனாதிபதி - கூட்டமைப்பு பேச்சு தவிர்க்க முடியாத ஒன்று!





**இலங்கை அணிசேராக் கொள்கையைப் புறக்கணித்து, இந்தியாவைப் பின்தள்ளி சீனா சார்பான அணியுடன் நெருங்கி இணைந்துள்ளமை தெளிவாகின்றது. இது ஒரு புதிய தலையிடியை வெளிநாட்டுறவில் உருவாக்கியுள்ளதுடன் அதனைக் கெட்டித்தனமாகத் தீர்க்கக்கூடிய சாணக்கிய வல்லமையுள்ள திறமைசாலிகள் இலங்கை அரசிடம் இல்லாதிருப்பது பிரச்னையை மேலும் வலுப்படுத்தியுள்ளது.**

**கலாநிதி அமீரலி**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை அண்மையில் அவசரமாகப் பேச்சுக்கு அழைத்ததும் அந்த அழைப்பை உடனடியாக இரத்துச்செய்து பேச்சுசை காலவரையின்றிப் பின்போட்டதும் யாவரும் அறிந்ததே. அவ்வாறு நடைபெற்றமைக்கு ராஜபக்ஷ ஆதரவாளர்களின் எதிர்ப்பே முக்கிய காரணமென்பதும் பரவலாகப் பேசப்பட்டது. அதுவே உண்மையும். இருந்தபோதும் இந்தப் பேச்சுக்கள் வெகுவிரைவில் நடைபெறுவதைத் தவிர்க்க முடியாது. இலங்கையின் பொருளாதார நிலைமையும் தொடர்ந்து பரவும் தொற்று நோயும் வெளிநாட்டு உறவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும் அப்பேச்சை விரைவுபடுத்தும்.

பசியும் பட்டினியும் பல இலட்சம் குடும்பங்களைக் கௌவிக்கொண்டுள்ளன. நாட்டின் தேசிய வருவாய் வெகுவாகச் சரிந்து, ஏற்றுமதிகள் வீழ்ச்சி கண்டு, அரசாங்கத்தின் வருமானமும் குறைந்து, கடன் பளுவும் உயர்ந்து நாட்டின் பொருளாதாரம் வங்குறோத்து அடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆட்சியாளர்களும் மத்திய வங்கியின் ஆளுநரும் உண்மை நிலையைப் பூசி மெழுகி மக்களுக்குத் தைரியம் ஊட்ட முயன்றாலும் நாளாந்தம் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் யதார்த்தத்தை வெளிப்படையாக உணர்த்துகின்றன.

ஆட்சியாளர்கள் இப்பொருளாதாரக் கஷ்டங்களுக்குத் தொற்று நோயைக் காரணம் காட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில், உலக நாடுகள் எல்லாமே அந்த நோயை எதிர்கொண்டுள்ளன. ஆனால், அவையெல்லாம் தொற்று நோய் நிபுணர்களின் ஆலோசனையின் பிரகாரம் அந்நோயின் பரவலைக் கட்டுப்படுத்தி குறிப்பிடத்தக்க அளவுக்கு வெற்றிகாண, இலங்கையின் ஆட்சியாளர்களோ நிபுணர்களின் ஆலோசனைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, மருத்துவத் தொழிற் சங்கத்தின் ஆலோசனைக்கு முன்னிடம் வழங்கி, இராணுவத்தினரின் கைகளில் அதனை அமுல்படுத்தும் பொறுப்பையும் ஒப்படைத்ததால் தொற்றின் பரவல் தொடர்ந்து செல்கின்றது.

சுருக்கமாகச் சொல்வதென்றால் பொருளாதாரச் சீர்குலைவையும் தொற்று நோயையும் ஒரே களத்தில் வைத்து எதிர்கொள்ளக்கூடிய ஒரு மாற்றுத் திட்டத்தை இந்த ஆட்சியாளர்களால் ஆரம்பத்திலிருந்தே வகுத்து அமுல்படுத்த முடியவில்லை. இதற்கான முழுப் பொறுப்பையும் ஆட்சியாளர்களே ஏற்கவேண்டும்.

ஒரு பக்கத்தில் பொருளாதாதரப் பிணி, மறுபக்கத்தில் கோவிட் பிணி. இந்த இரு பிணிகளுக்கும் மத்தியில் அரசின் வெளிநாட்டுக் கொள்கையின் விளைவாக ஏற்பட்டுள்ள நெருக்கடி. இதைப்பற்றிச் சற்று விரிவாக விளக்கவேண்டியுள்ளது. ஏனெனில், இதுவே ஜனாதிபதி - கூட்டமைப்பு பேச்சு வார்த்தை தவிர்க்க முடியாததொன்று என்பதை எடுத்துக்காட்டும்.

சுதந்திர இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை நீண்டகாலமாகத் தீர்மானித்த ஓர் அம்சம் இலங்கை அரசுகள் கடைப்பிடித்த அணிசேராக் கொள்கை. 1976ஆம் வருடம் கொழும்பில் மிகவும் கோலாகலமாக நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மகாநாடு அக்கொள்கையின் ஒரு வெற்றிச் சின்னம். நாட்டின் முக்கியமான இரண்டு தேசியக் கட்சிகளுள் ஐக்கிய தேசியக் கட்சி அமெரிக்கா சார்பான கட்சி என்றும் சுதந்திரக் கட்சி சோவியத் சார்பான கட்சியென்றும் பொதுவாகவே கருதப்பட்டாலும், 1950களுக்குப் பின்னர் உலகை அச்சுறுத்தி வளர்ந்த பனிப்போரிலே இலங்கை அரசாங்கங்கள் இந்தியாவுக்கு முதலிடம் வழங்கி ஓர் அணிசேரா நிலையையே கடைப்பிடித்து வந்தன. இந்தக் கொள்கை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் சாதகமாக அமைந்தது. அதனால் வெளிநாடுகளின் பார்வையில் இலங்கைக்கு ஒரு தனி மதிப்பு அப்போதிருந்தது என்பதையும் மறுக்க முடியாது.

ஆனால், நடந்து முடிந்த உள்நாட்டுப் போருடன், குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலும், தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியிலும் அணிசேராக் கொள்கை கைவிடப்பட்டு, அமெரிக்கா தலைமையிலான மேற்குலக அணிக்கும் அதனை எதிர்த்து வளரும் சீனாவின் அணிக்கும் இடையே இப்போது வளர்ந்துரும் ஒரு புதிய பனிப்போரில் இலங்கை அணிசேராக் கொள்கையைப் புறக்கணித்து, இந்தியாவைப் பின்தள்ளி சீனா சார்பான அணியுடன் நெருங்கி இணைந்துள்ளமை தெளிவாகின்றது.

இது ஒரு புதிய தலையிடியை வெளிநாட்டுறவில் உருவாக்கியுள்ளதுடன் அதனைக் கெட்டித்தனமாகத் தீர்க்கக்கூடிய சாணக்கிய வல்லமையுள்ள திறமைசாலிகள் இலங்கை அரசிடம் இல்லாதிருப்பது பிரச்னையை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இலங்கையின் வெளிநாட்டுறவை நிர்வகிப்பவர்களின் முதிர்ச்சியின்மையே கடந்த வருடம் புரட்டாதி மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை மகாநாட்டில் இலங்கை தோல்வியடையக் காரணமாயிற்று.

அமெரிக்க அணி இலங்கையின் அதிநெருங்கிய சீன உறவினால் எழுந்த அதன் வெறுப்பை வெளிப்படையாகக் காட்டாமல், அந்த வெறுப்பு உண்மையிலேயே இலங்கையின் சர்வாதிகார அரசியல் போக்குக்கும், இலங்கைப் பிரஜைகளின், அதிலும் குறிப்பாக சிறுபான்மையோரின் மனித உரிமைகள் பறிபோவதற்கும், சட்ட ஆட்சி ஒழிக்கப்படுவதற்கும், ஒட்டுமொத்தமாக இலங்கையின் ஜனநாயக மரபுகள் முறியடிக்கப்படுவதற்கும் எதிராகவே எழுந்ததென என்பதையே அவ்வணியின் நடவடிக்கைகள் உலகுக்கு உணர்த்துகின்றன.

இந்த நிலைப்பாட்டுக்குப் பின்னணியில் புலம்பெயர்ந்த இலங்கையரின் அதிலும் புலம்பெயர்ந்த தமிழரின் அழுத்தங்களும் உண்டென்பதையும் மறந்துவிடலாகாது. இலங்கைக்கெதிரான ஐ. நா. மனித உரிமைப் பிரேரணையிலும் அமெரிக்க காங்கிரஸின் தமிழர்களின் பாரம்பரிய நிலம் பற்றிய பிரேரணையிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான விசேட வரிச்சலுகைகள் நீக்கப்படும் என்ற மிரட்டலிலும் புலம்பெயர் தமிழரின் இனவாரியான நலனும் அமெரிக்க அணியின் புவிசார் அரசியல் இராஜதந்திர நலனும் இணைந்துள்ளதைக் காணலாம்.

எப்படி இருப்பினும் பொருளாதாரக் கஷ்டங்களும் தொற்று நோயின் பரவலும் சேர்ந்து ராஜபக்ஷ அரசின்மேல் மக்களின் வெறுப்பினை வளர்த்துவருகின்ற இச்சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பாவித்து மேற்குலகு இலங்கை அரசுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்திக்கொண்டே வருகின்றன. ஐ. நாவிலும் ஐரோப்பிய ஒன்றியத்திலும் அமெரிக்க காங்கிரஸிலும் நடைபெற்ற நிகழ்வுகள் இந்த உண்மையை வெளிப்படுத்தியுள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச்சலுகை நீக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டால் இலங்கையின் சிறு, நடுத்தர கைத்தொழில் ஏற்றுமதிக்கு அது ஒரு பேரிடியாய் மாறும். இந்த ஏற்றுமதிகளின் மிகப்பெரும் சந்தையாக இயங்குவது ஐரோப்பிய ஒன்றியம். திறந்த சந்தையில் இவ் ஏற்றுமதியாளர்களால் போட்டியிட்டு இலாபம் பெருக்க முடியாது.

எனவே மேற்குலகின் அழுத்தங்களைச் சமாளிப்பதற்கான ஒரு நடவடிக்கையாகத்தான் தமிழ் தலைமைத்துவத்துடன் பேச்சுக்களை ஆரம்பிப்பது பொருந்துமென ஜனாதிபதி கோட்டாபயவுக்குத் தென்பட்டதுபோலும். அந்த விழிப்பின் விளைவே கூட்டமைப்புக்கு விடுக்கப்பட்ட அழைப்பு. ஆனால், அந்த முயற்சியை வரவேற்கும் அளவுக்கு அவர் தனது ஆதரவாளர்களை தயார்படுத்தவில்லை. தெற்கிலே புயலொன்று வீசத் தொடங்கியது. இதனாலேதான் அந்த அழைப்பு உடனடியாக இரத்துச் செய்யப்பட்டது. ஆனால், நாடு நோக்கியுள்ள பொருளாதார வங்குரோத்து நிலையை நிறுத்துவதானால் மேற்குலகினை திருப்திப்படுத்த வேண்டியுள்ளது. ஆதலால் கூட்டமைப்புடன் பேச்சை நடத்துவதைத்தவிர ஜனாதிபதிக்கு மாற்றுவழி கிடையாது.

முடிவாக ஒன்று. அவ்வாறு கூட்டணித் தலைவர்கள் மீண்டும் அழைக்கப்பட்டால் அவர்கள் தமழரின் சார்பாக மட்டும் பேசுவார்களா, சிறுபான்மை இனங்கள் அனைத்தின் சார்பாகவும் பேசுவார்களா என்பதை கூட்டமைப்பின் தலைமைத்துவம் முடிவு செய்யவேண்டும். முஸ்லிம் தலைமைத்துவத்துக்கு அந்த அழைப்பு அனுப்பப்படாதது முஸ்லிம் தலைவர்களை விலைகொடுத்து வாங்கலாம் என்ற ஜனாதிபதியின் தைரியம் போலும். அந்தத் தைரியத்தை ஊட்டிவளர்த்தவர்களே முஸ்லிம் தலைவர்கள்தானே. எனவே, அவர்களின்மேல் முஸ்லிம் மக்களுக்கு நம்பிக்கை இல்லை. ஆதலால் கூட்டமைப்பினர் முஸ்லிம்களின் பிரச்னைகளையும் தமது பேச்சுக்களில் சேர்க்க வேண்டும். சேர்ப்பார்களா?

**கட்டுரையாளர், மேர்டொக் பல்பலைக்கழகம், மேற்கு அவுஸ்திரேலியா.**

ஈழநாடு

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 8 நேரம் - 45 நிமிடம்
வினாத்தாள் I ஆசிரியர் - மு.வே.அன்பழகன்

கல்வி TV CHANNEL

07. இரண்டாம் தவணைப்பரீட்சையில்
கமல் கீதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றான்.
கீதன் சுதாவிலும் குறைந்த புள்ளிகளைப் பெற்றான்.
சுதா கமலிலும் கூடுதலான புள்ளியைப் பெற்றான்.
புள்ளிகள் பெற்ற முறையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றதில் இருந்து குறைவான புள்ளிகள் பெற்றது வரை பிள்ளைகளின் பெயர்களை ஒழுங்கு முறையில் காட்டும் விடை

*1. சுதா, கீதன், கமல்* *2. கமல், சுதா. கீதன்* *3. சுதா. கமல், கீதன்*

08. சிவதாசனிற்கு 3 நாட்கள் வேலை செய்ததன் பின் ஒரு நாள் விடுமுறை கிடைக்கும். ஜூலை மாதத்தின் 1 ஆம் திகதி அவருக்கு விடுமுறை கிடைத்தது. அதன்படி, இந்த மாதத்தில் அவருக்குக் கிடைத்த விடுமுறைகளின் மொத்த எண்ணிக்கை

*1. 8* *2. 9* *3. 7*


* "?" வினாக்குறியிடப்பட்ட இடத்தில் வரவேண்டிய உருக்கோலத்தை ஒழுங்கில் காட்டும் விடையைத் தெரிவு செய்க.


09. ! ! o x ! ! ? x ! ! o x ! ! o ? ?

1. o ! x   2. ! o x   3. o x !


10. @ < ^ > @ ? ^ > @ < ? ?

1. < ^ >   2. > ^ <   3. < ^ <


11. 

12. 

* பின்வரும் தரப்பட்ட உருக்களில் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.

13. 

14. 

15. 
அருகில் தரப்பட்டுள்ள உருவில் காணப்படும் சதுரங்களின் எண்ணிக்கை யாது?

*1. 8* *2. 9* *3. 10*

17. நபர் ஒருவருடைய குணாதிசயம் சம்பந்தமாக ஏற்றுக்கொள்ள முடியாத உவமானத்தைத் தெரிவு செய்க.

*1. நரி போல் தந்திரமுள்ளவன்* *2. பசு போல் பொறாமையுள்ளவன்* *3. சிங்கம் போல் வீரன்*

17. கிராமங்களில் வசிப்போர் விருந்தோம்பும் நற்காரியத்தைச் செய்வதில் விருப்பமுள்ளவர். இதன்படி,

*1. விருந்தோம்பும் நல்ல செயலை விரும்புவோர் கிராமத்தில் மட்டும் வசிப்போர்.*
*2. கிராமங்களில் வசிப்பவர்கள் விருந்தோம்பும் நற்செயலில் விருப்பமில்லாதவர்கள் அல்லர்.*
*3. விருந்தோம்பும் நற்செயலுக்கு விரும்பாதவர் எவரும் கிராமங்களில் இல்லை.*

* பின்வரும் நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவு செய்க.


18. நிகழ்வு :- பணம் இல்லாது கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த எனக்கு நண்பன் ஒருவன் தன்னிடமிருந்த பணத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தான்.

*1. ஆசை வெட்கம் அறியாது*
*2. உப்பிட்டவரை உள்ளளவும் நினை*
*3. அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்.*

19. மாலதி பணக்காரவீட்டுப்பிள்ளை. அவள் சிறுவர் சஞ்சிகைகள், சித்திரக்கதைகள் எனப் பலவற்றைப் பாடசாலைக்குக் கொண்டு வருவாள். அவற்றை ஏனைய மாணவர்களுக்குக் காட்டுவாள். ஆனாலும் யாருக்கும் வாசிக்கக் கொடுக்க மாட்டாள். அவளைப் பற்றிக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமானது,

*1. பொதுநலவாதி* *2. சுயநலவாதி* *3. ஊதாரி*

20. ஒரு பிள்ளை உருவாக்கிய 3 சக்கரங்களைக் கொண்ட பொறிமுறை ஒன்று அருகே காணப்படுகின்றது. இங்கு A இருக்கும் சக்கரம் அம்புக்குறியால் காட்டப்படும், திசைக்கு திருப்பப்படுகிறது. அப்பொழுது 3 சக்கரங்களினதும் செயற்பாட்டினை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.



*1. ABC உள்ள சக்கரங்கள் மூன்றும் ஒரே திசைக்குத் திரும்பும்.*
*2. AC ஒரே திசைக்கும் B எதிர்த்திசைக்கும் திரும்பும்.*
*3. AB ஒரே திசைக்கும் C எதிர்த்திசைக்கும் திரும்பும்.*


21. இப்போது எனக்கு வயது 11 ஆண்டுகள் ஆகும். எனது தம்பியின் வயது 4 ஆண்டுகள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது தம்பியின் வயதை விட இரு மடங்காக இருக்கும்?

*1. 3 வருடங்களில்* *2. 4 வருடங்களில்* *3. 8 வருடங்களில்*

22. 1 தொடக்கம் 100 வரையுள்ள எண்களை எழுதும் போது இலக்கம் 2 எத்தனை தடவைகள் எழுதப்பட வேண்டும்?

*1. 10* *2. 19* *3. 20*

23. பின்வரும் படங்கள் ஒரு கதையை அடிப்படையாகக் கொண்டது. அவை ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளது. அவை சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.




*1. அ, ஆ, ஈ, இ* *2. அ, இ, ஈ, ஆ* *3. ஈ, ஆ, அ, இ*

# ‘மொட்டு’க்கும் ரணிலுக்கும் இடையில் ‘டீல்’ கிடையாது!

## சாகர எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 01**

**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எவ்வித டீலும் கிடையாது என்று ‘மொட்டு’ கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.**

ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற வருகையின் பின்னணியில் ‘மொட்டு’ கட்சியின் தலைவரான மஹிந்த ராஜபக்ச இருக்கின்றார் என வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே சாகர காரியவசம் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ‘டீல்’ அரசியல் நடத்தும் கட்சி கிடையாது. மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கும் கட்சி கட்டமைப்பாகும். நாட்டிலுள்ள பலமான அதிக அங்கத்தவர்களைக் கொண்ட கட்சி எமது கட்சியாகும்.

எனவே, எவருடனும் ‘டீல்’ போட வேண்டிய அவசியம் எமது கட்சிக்கு இல்லை. ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற வருகையால் குழம்பிப் போயுள்ளவர்களே இவ்வாறான தகவல்களைக் கட்டவிழ்த்து விடுகின்றனர்.

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற நாம் ‘டீல்’ போட மாட்டோம். மக்களுடன் மட்டுமே எமக்கான ‘டீல்’ உள்ளது” - என்றார். (இ)

# மிதக்கும் கொட்டகை அமைத்து சீன நாட்டவர் சுகபோக வேலை

## கஜேந்திரன் எம்.பி. சீற்றம்




கிளிநொச்சி, ஜூலை 01

“தமிழர்கள் நாட்டைப் பிரிக்க முனைவதாகப் பிடித்து சிறையில் அடைக்கும் அரசு, மிதக்கும் கொட்டகை அமைத்து அங்கே சீன நாட்டவர் ஒருவர் சுகபோகமாக வேலை செய்ய அனுமதித்துள்ளது.”

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, பூநகரி - கௌதாரிமுனையில் சீன நிறுவனத்தால் அனுமதியற்ற கடலட்டை வளர்ப்பை பார்வையிடச்சென்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கௌதாரி முனைப் பகுதியில் சீனர் ஒருவரால் அமைக்கப்பட்ட அட்டைப் பண்ணையைப் பார்ப்பதற்காக வந்திருந்தோம். குறித்த பகுதி கௌதாரிமுனைப் பகுதி மக்கள் காலாதிகாலமாக தொழில் செய்து வருகின்ற இடமாக இருக்கின்றது. அவ்வாறு கடல் தொழிலில் ஈடுபடுகின்ற மக்களின் சம்மதம் ஏதும் பெறப்படாமல் கடலட்டை வளர்ப்பதற்கும், அவர்கள் தங்குவதற்கான மிதக்கும் கொட்டகையும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

அவ்வாறான இடத்திலேயே அந்த சீனர் கடலட்டை வளர்ப்பை மேற்கொண்டுள்ளார் என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றார்கள். எந்தவிதமான முறையான அனுமதிகளும் பெறப்படாமல் குறிப்பாக இந்தப் பிரதேச மீனவர்களின் சம்மதம் இல்லாமல் இந்த இடம் அவர்களுக்குக் கடலட்டை வளர்ப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது.

தேசிய நீரியல் அபிவிருத்தி திணைக்களத்தின் அரியாலையில் இருக்கின்ற ஓர் அலுவலகத்தில் அனுமதி பெறப்பட்டிருப்பதாக தகவல் இருக்கின்றது. ஆனால், எந்தவிதமான ஆவணமும் அவர்களால் இன்றும் காட்டப்படவில்லை.

ஒரு வெளிநாட்டவர் எவ்வாறு இலகுவாக வந்து இந்த இடத்தைப் பிடித்து கடலட்டை வளர்க்கின்ற செயற்பாடு இடம்பெறுகின்றது என்பது ஒரு கேள்வியாகின்றது. இதனை சட்டவிரோதமான நடவடிக்கையாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

இது தொடர்பான நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட்டு உடனடியாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இங்கே அது தொடர்பாக ஆட்சேபனைகள் எழுந்திருக்கின்ற போதிலும்கூட அந்தச் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தமிழர்களின் பிரதேசத்தில் அந்நியர்கள் வந்து இந்த பிரதேச மக்களின் அனுமதியில்லாமல் உள்நுழைந்திருப்பது என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. வீணாக ஒரு பதற்றத்தை இந்தப் பிரதேசத்தில் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு அனுமதித்திருக்கின்றதா என்ற கேள்வி எழுந்திருக்கின்றது. அல்லது சீனர்கள் என்றதும் அரசு நடவடிக்கை எடுக்க அஞ்சுகின்றதா என்ற கேள்வியும் இருக்கின்றது.

தமிழர்கள் சில காரியங்களைச் செய்கின்றபோது சம்பந்தம் இல்லாமல் அவர்கள் நாட்டைப் பிரிக்க முனைவதாகக் கூறி பிடித்து சிறையில் அடைத்துள்ளார்கள். ஆனால், எங்கிருந்தோ வந்த சீனர் மிதக்கும் கொட்டகை அமைத்து அங்கே சுகபோகமாக எங்களுடைய மக்களைத் தெருவில் விட்டுவிட்டு வேலை செய்து கொண்டிருக்கின்றார்” - என்றார். (இ)

# நோயாளர் காவு வாகனத்தை குடையால் தாக்கியவர் கைது

கம்பஹா, ஜூலை 01

கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சொந்தமான நோயாளர் காவு வாகனம் (அம்புலன்ஸ்) மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் 64 வயது நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கம்பஹா நகர் வழியாக நோயாளர் காவு வாகனம் பயணித்தபோதே அதற்குச் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் மதுபானம் அருந்திய நிலையில், தனது கையில் வைத்திருந்தக் குடையால் நோயாளர் காவு வாகனம் மீது தாக்குதல் நடத்தியுள்ளார் என்று கம்பஹா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

“உங்களால் எம்மை இவ்வாறு அழைத்துச் செல்ல முடியாதா?” எனக் கேள்வி எழுப்பி குறித்த நபர், நோயாளர் காவு வாகனம் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனால் நோயாளர் காவு வாகனத்தின் யன்னல் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

அரச சொத்துக்கு சேதம் விளைவித்தமை, பொதுச் சுகாதார விதி முறைகளை மீறியமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# எஸ்.பிக்கு அமைச்சு பதவி?



கொழும்பு, ஜூலை 01

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி. திஸநாயக்கவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படலாம் என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் அமைச்சரவையும் மறுசீரமைக்கப்படவுள்ளது. இதன்போதே எஸ்.பிக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படலாம் என தெரியவருகின்றது.

எனினும், இது தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வமாக எவ்வித தகவலும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சட்டத்தை மறந்து திருமணம்; 20 பேர் வசமாக சிக்கினார்கள்

## 14 நாட்கள் தனிமைப்படுத்தலில்

பாணந்துறை, ஜூலை 01

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி, பாணந்துறை - பல்லேமுல்ல பகுதியில் திருமண நிகழ்வொன்றை நடத்திய 20 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 12 ஆண்களும், 8 பெண்களும் அடங்குகின்றனர்.

14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டதன் பின்னர், அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி திருமண நிகழ்வொன்று இடம்பெறுகின்றது எனக் கிடைத்த தகவலை அடுத்து, அங்கு விரைந்த பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து நடத்திய சோதனை நடவடிக்கையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (இ)

# சபையில் அடிதடியை எப்படி தடுப்பது? அடுத்த வாரம் அறிக்கை கையளிப்பு

கொழும்பு, ஜூலை 01

2021ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி சபைக்குள்ளும், பாராளுமன்ற வளாகத்திலும் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து, அதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை அடுத்த வாரம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் கையளிக்கப்படவுள்ளது.

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையிலான இக்குழுவில் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, கெஹலிய ரம்புக்வெல, இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான அநுரபிரியதர்ஷன யாப்பா, இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், ஆர்.எம்.ரஞ்சித் மத்தும பண்டார, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் உறுப்பினர்களாகச் செயல்படுகின்றனர்.


ஏப்ரல் 21ஆம் திகதி ஏற்பட்டது போன்று குழப்பமான சூழ்நிலை மீண்டும் பாராளுமன்றத்தில் ஏற்படாதிருப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதைப் பரிந்துரைப்பதற்காக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவால் கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

இதற்கமைய இதுபோன்ற சம்பவங்களினால் ஒட்டுமொத்த பாராளுமன்றத்திலும் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்து விரிவாக ஆராய்ந்த இக்குழு, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்கான நீண்டகால மற்றும் குறுகியகால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளது.

இது தொடர்பான முழுமையான அறிக்கையை சபாநாயகரிடம் கையளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ)

# தீவிரவாதிகளின் ஆயுதமாக ட்ரோன்கள் தடுக்க சர்வதேசம் இணையவேண்டும்!

## ஐ. நாவில் இந்தியா அழைப்பு



**நியூயோர்க், ஜூலை 01**

**வெடிகுண்டுகளை தாங்கி வரும் ட்ரோன்களை தீவிரவாதிகள் புதிய ஆயுதமாக பயன்படுத்தத் தொடங்கி இருக்கின்றனர். இதைத் தடுக்க உலக நாடுகள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.**

அண்மையில், இந்தியாவின் - ஜம்மு காஷ்மீரிலுள்ள உயர் பாதுகாப்பு நிறைந்த விமான நிலையத்தின் தொழில்நுட்ப பகுதியில் வெடிகுண்டு பொருத்தப்பட்ட ட்ரோன் அனுப்பப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டது. இதில் 2 இந்திய இராணுவத்தினர் காயமடைந்தனர். பெரியளவில் பாதிப்பு ஏற்படவில்லை.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஐ. நா. சபையில் தீவிரவாதம் குறித்த சிறப்பு விவாதத்தில் பங்கேற்ற இந்திய பிரதிநிதி, "தீவிரவாதம், ஒரு நாட்டுக்கான பிரச்னையல்ல. உலக அமைதிக்கும், வளர்ச்சிக்கும் எதிரானது. ஆயுதம் தாங்கிய ட்ரோன்களை பயன்படுத்தி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தும் போக்கு அதிகரித்துள்ளது. இது ஒரு கொடூர தாக்குதல்.

தீவிரவாதிகளின் புதிய ஆயுதமாக ட்ரோன் மாறி வருகிறது. நவீன தொழில்நுட்பங்கள் தீவிரவாதிகளுக்கு மிகவும் சாதகமாக உள்ளது. நவீன தொழில்நுட்பங்கள் இப்போது பல தவறான செயல்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன. சமூகவலைதளங்களையும் தீவிரவாதிகள் பயன்படுத்துகின்றனர். இந்த விவகாரத்தில் உலக நாடுகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதை தடுக்க உலக நாடுகள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)



# 90 நிமிடங்களில் வைரஸை அறிந்து எச்சரிக்கும் மாஸ்க்!

*வாஷிங்டன், ஜூலை 01*

*90 நிமிடங்களில்* கொரோனா வைரஸை கண்டறியக்கூடிய புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய முககவசத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் இன்ஸ்ரிரியூட் ஒவ் ரெக்னாலஜி (எம். எஸ். ரி) மற்றும் ஹவார்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இணைந்து வடிவமைத்துள்ளனர்.

இது குறித்து நேச்சர் பயோரெக்னாலஜி பிரபல அறிவியல் இதழ் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

பிரெஞ்சு விஞ்ஞானிகள் அதிநவீன நோய்களை கண்டறியும் சென்ஸர்கள் பொருத்திய கவசங்களை கண்டுபிடித்துள்ளனர். காற்றில் கொரோனா வைரஸ் உட்பட வேறு ஏதாவது வைரஸ் இருந்தால் அதனை இந்த முககவசத்துடன் பொருத்தப்பட்டிருக்கும் சென்ஸர்கள் கண்டறிந்து உடனடியாக முககவசத்தை அணிந்திருப்பவருக்கு தகவல் அளிக்கும். இதனால் அவர்கள் அந்த இடத்தை விட்டு விரைவில் நகர்ந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர் - என்றுள்ளது. (ஐ)

# தடுப்பூசி மூலம் தடுக்காவிடின் பிரான்ஸில் 4ஆம் தொற்றலை!

*பாரிஸ், ஜூலை 01*

பிரான்ஸ் செப்ரெம்பருக்குப் பின்னர் இலையுதிர் காலப் பகுதியில் - நான்காவது தொற்றலையைச் சந்திக்கும் ஆபத்து உள்ளது என்று பஸ்தர் நிறுவனத்தின் மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'டெல்டா' போன்ற புதிய வைரஸ்களின் பரவலையும், போதியளவு சனத்தொகையினருக்குத் தடுப்பூசி இன்னமும் ஏற்றி முடிக்கப்படாமல் இருப்பதையும் கவனத்தில் கொண்டு நிலைமையை மதிப்பீடு செய்துள்ளது பஸ்தர் நிறுவனம். நான்காவது வைரஸ் அலையைத் தடுப்பது தடுப்பூசியிலேயே தங்கி உள்ளது என்பதை அதன் அறிக்கை தெளிவுபடுத்தி உள்ளது.

சிறுவர்கள் மற்றும் வளர்ந்த பிள்ளைகளில் கணிசமானோருக்குத் தடுப்பூசி ஏற்றி முடிக்கின்ற இலக்கைக் கோடை விடுமுறை காலப்பகுதிக்குள் எட்டாது விட்டால் எதிர்வரும் செப்ரெம்பரில் பாடசாலைகள், கல்லூரிகள் ஆரம்பமாகின்றபோது எந்தவித இறுக்க




மான சுகாதார கட்டுப்பாடுகளும் பேணப்படாமல் விடப்பட்டால், வரும் இலையுதிர் காலப்பகுதியில் தொற்றுக்கள் உச்சமாக உயர்ந்து மருத்துவமனைகள் மீது மற்றொரு முறை அழுத்தங்கள் அதிகரிக்கக்கூடும் என்று பஸ்தர் நிறுவன நிபுணர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

*12 முதல் 17 வயதுடையோரில் 30 வீதமானோருக்கும் - 18 முதல் 59 வயதுக்கு இடைப்பட்டோரில் 70 வீதமானோருக்கும், 60 வயதுக்கு மேற்பட்டோரில் 90 வீதமானோருக்கும் தடுப்பூசி* ஏற்றப்பட்டால் மட்டுமே அடுத்த வைரஸ் தொற்றலையில் இருந்து பாதுகாப்பு பெற முடியும் என்று அறிவியலாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர். (ஐ)




# மலேரியா நோயை ஒழித்த நாடுகள் வரிசையில் சீனா!

## உலக சுகதார அமைப்பு நேற்று பிரகடனம்

*ஜெனிவா, ஜூலை 01*

மலேரியா இல்லாத நாடாக சீனாவை உலக சுகாதார அமைப்பு நேற்று - ஜூன் 30 ஆம் திகதி பிரகடனப்படுத்தியது.

சீனாவை அச்சுறுத்தி வந்த மலேரியா நோய் முற்றிலும் ஒழிபட்டுள்ளது. நுளம்புகளால் பரவும் மலேரியா நோயை ஒழிப்பதற்காக 70 ஆண்டுகள் போராடிய சீனாவுக்கு கிடைத்த வெற்றி இது என்றும் உலக சுகாதார அமைப்பு பாராட்டி சான்றளித்துள்ளது.

கடந்த 4 ஆண்டுகளாக ஒரு வருக்குக்கூட மலேரியா காய்ச்சல் பாதிப்பு இல்லை என்ற நிலையை எட்டி சீனா சாதித்துள்ளது. இந்த நிலையில் மலேரியா நோயை நாட்டில் இருந்து முற்றாக அகற்றியதற்காக சீன மக்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கூறியுள்ளார்.

குறைந்தது மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக மலேரியா காய்ச்சல் இல்லாத நாடுகள் உலக சுகாதார அமைப்பின் மலேரியா இல்லாத நாட்டுக்கான சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால், அந்த நாடுகள் சரியான ஆதாரங் களை சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும், மலேரியா மீண்டும் ஏற்படாது என்பதற்கான நடவடிக்கைகளுக்கான ஆதாரங்களையும் நிரூபிக்க வேண்டும். இதன்படி சீனா 2020 - இல் உலக சுகாதாரத்துறையிடம் சான்றிதழ் பெற விண்ணப்பித்து மலேரியாவை ஒழித்த நாடுகளின் பட்டியலில் இப்போது இணைந்துள்ளது.

இலங்கை 2016 ஆம் ஆண்டு மலேரியாவை ஒழித்த நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கனடா தொற்று பலி; இரு மடங்கு அதிகம்! ஆய்வில் புதிய தகவல்

*ரொறன்ரோ, ஜூலை 01*

கனடாவில் கொரோனா தொற்றால் மரணமானவர்களின் எண்ணிக்கை பதிவானதை விட இரு மடங்கு அதிகமாக இருக்கலாம் என்று ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது.

உத்தியோகபூர்வ தரவுகளின் பிரகாரம் கனடாவில் நேற்று வரை *26* ஆயிரத்து *230* பேர் கொரோனாவால் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

எனினும் கனடாவின் றோயல் சொசைட்டி வெளியிட்டபுதிய அறிக்கையின் படி, கோவிட்-19 தொற்று நோயால் இறந்த கனடியர்களின் எண்ணிக்கை, உத்தியோகபூர்வ தொகையில் காட்டப்பட்டுள்ளதை விட இரு மடங்காக இருக்கலாம் என்றுள்ளது.

இது உண்மையில் பேரழிவு, ஆய்வில் கண்டறியப்பட்ட விடயங்கள் மிகவும் அதிர்ச்சியளிப்பனவாக இருந்தன என்று ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் தொற்று நோய் ஆராய்ச்சியாளரும் அறிக்கையின் ஆசிரியர்களில் ஒருவருமான தாரா மோரியார்டி தெரிவித்தார்.

உத்தியோகபூர்வமாக அறிக்கையிடப்படாத பெரும்பாலான கொரோனா மரணங்கள் வீடுகளில் இடம்பெற்றவையாக இருக்கலாம் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கனடாவில் வெப்பநிலை அதிகரிப்பால் பலர் பலி!



*வன்கூவர், ஜூலை 01*

கனடாவில் பல மாகாணங்களில் முன்னொருபோதும் இல்லாத வகையில் கடும் வெப்ப அலை பதிவாகி வருகின்றது. கடும் வெப்பத்தால் பாதிக்கப்பட்டு இதுவரை பல பத்துப் பேர் உயிரிழந்தனர்.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் திங்கட்கிழமை முதல் கிட்டத்தட்ட 70 திடீர் மரணங்கள் பதிவாகியுள்ளன என்று அம்மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் வயதானவர்கள். இந்த மரணங்களுக்கு கடும் வெப்ப அலையும் ஒரு காரணமாகும் என அவர்கள் கூறியுள்ளனர்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை வெப்பநிலை 49.5 பாகை செல்சியஸ் அளவுக்கு அதிகரித்தது. இந்த வாரத்துக்கு முன்னர் கனடாவில் வெப்பநிலை எப்போதும் 45 பாகை செல்சியஸை கடந்ததில்லை.

கடும் வெப்பம் அதிகரித்துவரும் நிலையில் அதிகம் பாதிக்கப்படக்கூடிய நபர்கள் குறித்து அவதானம் செலுத்துமாறு கனடியர்களுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது.

வன்கூவர் புறநகர்ப் பகுதிகளான பர்னாபி மற்றும் சர்ரேயில் அண்மைய நாட்களில் 69 பேர் இறந்தமைக்கு வெப்பம் ஒரு காரணி என்று நம்பப்படுகிறது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)



# ஜேர்மனியை வீழ்த்திய இங்கிலாந்து காலிறுதியில்!

இங்கிலாந்து அணி 2-0 என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தது.

யூரோ கிண்ண உதைபந்தாட்ட தொடரில் இரண்டாவது சுற்றான 16 அணிகள் சுற்று தற்போது நடக்கிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் பரமவைரிகள் என்று வர்ணிக்கப்படும் ஜேர்மனி - இங்கிலாந்து அணிகள் மோதின.

ஆரம்பம் முதலே அனல் ஆட்டத்தில் அனல் பறந்தபோதும் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காமல் ஆட்டத்தை நிறைவு செய்தன.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஜேர்மனியின் காப்பரணை தகர்த்தனர் இங்கிலாந்து வீரர்கள். சக வீரர் தட்டிக் கொடுத்த பந்தை ரஹீம் ஸ்ரெர்லிங் கோலாக மாற்றினார்.

ஜேர்மனி வீரர்கள் சுதாகரித்து மீள்வதற்குள் 86ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் அணித் தலைவர் ஹரி கேன் தலையால் முட்டி கோல் போட்டார். இறுதி வரை ஜேர்மனியால் இங்கிலாந்து அணிக்கு பதிலடி கொடுக்க முடியவில்லை.

இதனால், 2 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி காலிறுதி சுற்றுக்கு முன்னேறியது.

16 அணிகள் சுற்றில் ஜேர்மனியை இங்கிலாந்து வீழ்த்துவது 1966ஆம் ஆண்டின் பின்னர் இதுவே முதல் சந்தர்ப்பமாகும். (ஐ)

# கிறிஸ் வோக்ஸ் மிரட்டல்: இங்கிலாந்து அபார வெற்றி!

லண்டன், ஜூலை 01

கிறிஸ் வோக்ஸின் மிரட்டலான பந்து வீச்சுடன் இலங்கைக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து ஐந்து விக்கெட்களால் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து சென்றுள்ள இலங்கை அணி, அந்த அணிக்கு எதிரான இருபது - 20 தொடரை முழுமையாக இழந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரு அணிகளுக்கும் இடையிலான ஒரு நாள் போட்டி ஆரம்பமானது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் இயன் மோர்கன் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.



முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு தொடக்க வீரர்களில் ஒருவரான குசல் பெரேரா மட்டும் தாக்குப்பிடிக்க ஏனைய முன்னணி வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் வீழ்ந்தனர்.

எனினும், நான்காவது விக்கெட்டுக்காக குசல் பெரேராவுடன் இணைந்த வனிந்து ஹசரங்க சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இருவரும் 99 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர்.

65 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 54 ஓட்டங்களைப் பெற்ற ஹசரங்க கிறிஸ் வோக்ஸின் பந்தில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த தனஞ்சய லக்ஷான் 2, ரமேஷ் மெண்டிஸ் 1 என ஆட்டமிழந்தனர்.

மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய குசல் பெரேரா 81 பந்துகளில் 7 பௌண்டரிகளுடன் 73 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இதற்கு பின்னர் எந்த வீரரும் தாக்குப்பிடிக்கவில்லை. இதனால், 42.3 ஓவர்களில் 185 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது இலங்கை அணி.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் கிறிஸ் வோக்ஸ் 5 ஓட்டமற்ற ஓவர்களை வீசியதுடன் 4 விக்கெட்களை கைப்பற்றினார். டேவிட் வில்லி 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

186 என்ற இலகுவான இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடியது இங்கிலாந்து அணி.

பெயர்ஸ்ரோ, லிவிங்ஸ்ரன் இணை தொடக்கம் கொடுத்தது. இருவரும் அதிரடியாக ஆட்டத்தை தொடங்கியபோதும், ஒரு சிக்ஸருடன் 9 ஓட்டங்களை பெற்ற நிலையில் கருணாரத்தினவின் பந்தில் லிவிங்ஸ்ரன் வீழ்ந்தார்.

அடுத்து வந்த ஜோ ரூட் வழக்கமான தனது பாணியில் ஆடினார். இதனால், இலகுவாக வெற்றி இலக்கை நோக்கி இங்கிலாந்து முன்னேறியது. எனினும் 6 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 43 ஓட்டங்களை குவித்த பெயர்ஸ்ரோ ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து இங்கிலாந்து சற்று தடுமாறியது.

அணித் தலைவர் இயன்மோர்கன் 6, சாம் பில்லிங்ஸ் 3, மொயின் அலி 28 என்று ஆட்டமிழந்தனர்.

இறுதியில் 34.5 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

இலங்கையின் பந்துவீச்சில் சாமிர 3 விக்கெட்களைக் கைப்பற்றி னார்.

போட்டியின் நாயகனாக கிறிஸ் வோக்ஸ தெரிவானார். (ஐ)



# மெஸ்ஸி அசத்தல் ஆட்டம்: ஆர்ஜென்ரீனா அபார வெற்றி!

பிரேஸிலியா, ஜூலை 01

மெஸ்ஸியின் அசாத்திய ஆட்டம் கைகொடுக்க பொலிவியா அணியை 4 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது ஆர்ஜென்ரீனா.

தென்னமெரிக்க நாடுகள் மோதும் கோபா அமெரிக்க உதைபந்தாட்ட தொடர் பிரேஸிலில் நடக்கிறது. இதில், நேற்று முன்தினம் நடந்த போட்டியில் ஆர்ஜென்ரீனா, பொலிவியா அணிகள் மோதின.

போட்டி ஆரம்பித்த 6ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனாவின் மரியா கொமெஸ் தனது அணிக்காக முதல் கோல் அடித்தார்.

33ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்டனை உதை (பெனால்டி) வாய்ப்பை மெஸ்ஸி கோலாக மாற்றினார். தொடர்ந்து அசத்திய அவர் 42ஆவது நிமிடத்தில் இலகுவாக தனது இரண்டாவது கோலை அடித்தார்.

இதனால், முதல் பாதி ஆட்டத்தில் 3 - 0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனா முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் பொலிவிய வீரர் சாவெட்ரா, 60ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். அடுத்த ஐந்தாவது நிமிடம் லா மார்டினெஸ் (65ஆவது) ஒரு கோல் அடித்தார்.

இறுதியில் ஆர்ஜென்ரீனா 4 -1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ)

# விம்பிள்டன் தொடரிலிருந்து செரீனா கண்ணீருடன் விலகல்!

லண்டன், ஜூலை 01

23 முறை கிராண்ட்ஸ்லாம் சம்பியனான செரீனா வில்லியம்ஸ் 2021 விம்பிள்டன் தொடரிலிருந்து கண்ணீருடன் விலகினார்.

விம்பிள்டன் தொடர் இங்கிலாந்தில் நடக்கிறது. இதில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் 7 முறை சம்பியன் பட்டம் வென்றவரான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் பெலாரஸ் நாட்டின் அலைக் சண்ட்ரா சாஸ்னோவிச்சை எதிர்கொண்டார்.

ஆட்டத்தின் இடையே செரீனா கால் சறுக்கி விழுந்தார். இதனால், அவரின் இடது கணுக்காலில் காயம் ஏற்பட்டு வலியால் துடித்தார். முதலுதவியை தொடர்ந்து அவர் விளையாட முயன்றார்.

ஆனால், அரை மணி நேரத்தின் பின்னர் விளையாட முடியாததால் அவர் போட்டியலிருந்து விலகினார். அப்போது ஆட்டம் 3 - 3 என்ற செற் கணக்கில் சமநிலையில் இருந்தது.

24ஆவது கிராண்ட்ஸலம் சம்பியனுக்காக காத்திருந்த செரீனா அந்தக் கனவு கலைந்த நிலையில் கண்ணீருடன் விடைபெற்றார். (ஐ)





# விம்பிள்டன் ரென்னிஸ் தொடர்: ஆஷ்லே, இகா அடுத்த சுற்றில்!

லண்டன், ஜூலை 01

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு முன்னணி வீராங்கனைகளான ஆஷ்லே பார்டி, இகா ஸ்வியாடெக் ஆகியோர் முன்னேறினர்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் இங்கிலாந்தில் நடக்கிறது.

இதில் நேற்று முன்னதினம் இரவு நடந்த போட்டிகளில் ஒன்றில், போலந்தின் இகா ஸ்வியாடெக், தாய்வானின் சு வெய்யை சந்தித்தார்.

முதல் செற்றை 6 - 4 என்று கைப்பற்றிய இகா, அடுத்த செற்றையும் 6 - 4 என்ற கணக்கில் தன்வசப்படுத்தி வெற்றி பெற்றார். மற்றொரு போட்டியில் உலகின் முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்டி, ஸ்பெயினின் சுவாரஸ் நவரோவாவை எதிர்கொண்டார்.

முதல் செற்றை 6-1 என்று எளிதாக வென்ற ஆஷ்லே பார்டி, அடுத்த செற்றை 6-7 என்ற கணக்கில் இழந்தார். எனினும், மூன்றாவது செற்றை 6 - 1 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். (ஐ)

# அரசுக்கு எதிராக ஜே.வி.பியினர் நாவலப்பிட்டியில் ஆர்ப்பாட்டம்

## பொருட்களின் விலைகளை குறைக்குமாறு வலியுறுத்து

**கண்டி, ஜூலை 01**

**மக்கள் விடுதலை முன்னணியால் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களில் ஓர் அங்கமாக கண்டி - நாவலப்பிட்டி நகரிலும் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.**

எரிபொருள், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்குமாறும், விவசாயிகளுக்கு உரம் வழங்குமாறும் அரசை வலியுறுத்தும் விதமாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

கொரோனா, பயணக் கட்டுப்பாடு போன்ற விடயங்களால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், எரிபொருள் விலை அதிகரிப்பு மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு முட்டுவது போன்றதாகும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் எரிபொருட்களின்



விலை குறைக்கப்பட வேண்டும் என்றும் மக்கள் வலியுறுத்தினர்.

மாற்று வழிகளை அறிமுகப்படுத்தாமல் இரசாயன உரப் பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், உரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (இ)

# இரண்டரை வயது குழந்தை குழிக்குள் வீழ்ந்து மரணம்!

## மஸ்கெலியாவில் சோகம்



மஸ்கெலியா, ஜூலை 01

நுவரெலியா மாவட்டம், மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரவுன்ஸ்வீக் தோட்டத்தில் ஆண் குழந்தை ஒன்று குழிக்குள் வீழ்ந்து உயிரிழந்தது.

பிரவுன்ஸ்வீக் - 50 ஏக்கர் பகுதியைச் சேர்ந்த ஜெயசுந்தரம் சுலக்ஷனன் என்ற இரண்டரை வயதான குழந்தையே உயிரிழந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்த குழந்தை காணாமல்போனதையடுத்து, நேற்றுமுன்தினம் மாலை பெற்றோர் குழந்தையைத் தேடியுள்ளனர்.

இதன்போது வீட்டுக்கருகிலுள்ள மாட்டுத் தொழுவத்திலிருந்து வெளியேறும் கழிவுகளுக்காக வெட்டப்பட்டிருந்த குழிக்குள் வீழ்ந்திருந்த நிலையில் குழந்தை மீட்கப்பட்டது.

பின்னர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது குழந்தை உயிரிழந்தது.

நீதிவானின் விசாரணைகளின் பின்னர் சடலம் மீதான பிரேத பரிசோதனை நேற்று இடம் பெற்றது.

சம்பவம் தொடர்பில் மஸ்கெலியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி சம்பவம் மஸ்கெலியா - பிரவுன்ஸ்வீக் தோட்டப் பகுதியைப் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (இ)

**காணி விற்பனைக்கு**

இராச பாதை வீதி,
கோப்பாயில்
2 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு.
T.P : 0777730567

# நான்கு மாவட்டங்களில் 6 பிரதேசங்கள் முடக்கம்




கொழும்பு, ஜூலை 01

நான்கு மாவட்டங்களில் ஆறு கிராமசேவர் பிரிவுகள், நேற்றுக் காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மொனராகலை, கேகாலை, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலேயே ஆறு கிராம சேவர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மொனராகலை மாவட்டத்தில் பிபிலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனுல்வெல கிராம சேவகர் பிரிவும், வரக்காபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹல்லவ கிராமசேவர் பிரிவில் நியதுருபொல இலக்கம் 1,2,3,4 ஆகிய தோட்டங்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கேகாலை மாவட்டத்தில் சுன்னாகம் கிராம சேவகர் பிரிவில் தேவாலகந்த வத்த பிரிவு முடக்கப்பட்டுள்ளது.

மேலும், தெஹியோவிட்ட கொடம்பல கிராம சேவகர் பிரிவில் பம்பேகம தோட்டப் பகுதி முடக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் தொடங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலதுவ கிராம சேவகர் பிரிவில் எலுதவ தோட்டம் முடக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தில் எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பழைய கொலனி கிராம சேவ கர் பிரிவில் திவித்துரு தோட்டம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, களுத்துறை, கம்பஹா, கேகாலை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஐந்து கிராமசேவகர் பிரிவுகளை நேற்று தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ)

# கைக்குண்டு, ரி-56 ரக துப்பாக்கியுடன் வெவ்வேறு இடங்களில் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 01

இரத்மலானை மற்றும் கம்பஹா ஆகிய பிரதேசங்களில் ஆயுதங்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்மலானை, கல்தேமுல்ல பகுதியில் கைக்குண்டுடன் 22 வயதுடைய இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர், டுபாய் நாட்டிலிருந்து போதைப் பொருள் வர்த்தகம் உள்ளிட்ட ஏனைய குற்றச் செயல்களை முன்னெடுத்து வரும் 'குடு அஞ்சு' என்பவரின் நண்பர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, கம்பஹா பகுதியில் ரி - 56 ரகத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 433 பேர் கைது

கொழும்பு, ஜூலை 01

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 433 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 45 ஆயிரத்து 532 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.(இ)

**மரண அறிவித்தல்**

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 16 - 04 - 1947 |  | 24 - 06 - 2021 |

**கனகரட்ணம் ரட்ணமகேசன்**

(பழைய மாணவர் – கொக்குவில் இந்துக் கல்லூரி)

யாழ். கொக்குவில் கிழக்கு, பிரம்படி லேனைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Essenஐ வதிவிடமாகவும் கொண்ட கனகரட்ணம் ரட்ணமகேசன் கடந்த 24.06.2021 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் – மனோன்மணி தம்பதியரின் தவப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் – பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும்,வசந்தரூபி அவர்களின் பாசமிகு கணவரும், ஜலனன், ஜெயானி, ஜலரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,காலஞ்சென்றவர்களான சீவகாருண்யம் – புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும்,காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் பாக்கியம் ஆகியோரின் அன்பு பெறாமகனும், மருமகனும், காலஞ்சென்ற பூபதி ( ரதி – ஜேர்மனி ), இரத்தினகலாவதி (கலா – இலங்கை), இரத்தினமலர் (பவா – ஜேர்மனி), இரத்தினமாலதி ( பேபி – ஜேர்மனி ), இரத்தினவசந்தி ( சாந்தி – லண்டன் ) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், நந்தசுதன், நிருஜா ஆகி யோரின் அன்பு மாமனாரும், தசானிக்கா, பிரித்திக், நைனிக்கா, ஜெய்டன் ஆகியோரின் அன்புப் பேரனும்,சந்திரமோகன் (லண்டன்), யோகநாதன் ( இலங்கை ), மாணிக்கராஜா ( ஜேர்மனி ), ரவீந்திரன் ( ஜேர்மனி ), காலஞ்சென்ற சீறிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,சுவீற்றா, சிந்தியா, லிண்டா, சுஜீவன், டுஷிகா, அருண், அர்ஜுன், சங்கீதா, தேனுஜா ஆகியோரின் பாசமிகு தாய் மாமனும்,ரூபன், சுமன், குமரன், றபேலா, பாலமுரளி, பிரசாந்தி, சபீனா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும்,ஜிவானோ, ஸ்டீவனோ, ஜெலினா, ஜஸ்மிண்டா, ஸ்ரேயா, ஜோஸ்வா, எஸ்தர், ஆரோன், ரதீனா, நேரு, அரிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

*தகனம்:*
Thursday, 01 Jul 2021 1:00 PM - 3:00 PM
Krematorium am Hellweg Hellweg 95, 45279 Essen, Germany

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**இரத்தினமாலதி - சகோதரி**
Mobile : +491786677727

தகவல்
**குடும்பத்தினர்.**

## மீண்டும் நாடு...

தீர்மானம் அடுத்த வாரத்தில் எடுக்கப்படலாம் என்று சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இலங்கையில் டெல்டா மாறுபாடான கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட 05 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் தொற்று மேலும் பரவக்கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இதில் கருத்து வெளியிட்ட மருத்துவர் ஹேமந்த ஹேரத்-

டெல்டா மாறுபாடான தொற்று இலங்கையில் பரவியிருப்பதற்கான தெளிவான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

நாடளாவிய ரீதியில் பூகோள மட்டத்தில் எத்தனை பேருக்கு இந்தத் திரிபடைந்த தொற்று ஏற்பட்டிருக்கின்றது என்பது பற்றிய பரிசோதனைகள் தீவிரமாக நடத்தப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே 05 தொற்றாளர்கள் இந்த டெல்டா மாறுபாடான தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்த வகையில் அவர்களைத் தவிர வேறு நபர்களுக்கு இந்தத் தொற்று ஏற்பட்டிருப்பதற்கான எந்த உறுதிப்படுத்தக்கூடிய தகவலும் நேற்று வரை சுகாதார அமைச்சுக்கு கிடைக்கவில்லை.

இருந்த போதிலும் நாடு முழுவதிலும் இந்தத் தொற்றினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்துக்கிடமான நபர்களிடம் பரிசோதனை நடத்துதல் என பல்வேறு முயற்சிகளை நாங்கள் நடத்தி வருகின்றோம்.

இலங்கை முழுவதிலும் மீண்டும் பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பதா இல்லையா என்பது குறித்து அடுத்த வாரம் தீர்மானிக்கப்படும்.

ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட பயணக் கட்டுப்பாடு காரணமாகவே தற்போது நாளாந்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 2000ஐ விட குறைந்துள்ளது-என்றார். (அ)

## பருத்தித்துறை...

ரிழந்த முதியவர் உட்பட மேலும் நால்வருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்டு முன்னதாக தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட ஒருவருடன் தொடர்புபட்டு, தும்பளை - கணக்கிலாவத்தை பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒரே குடும்பப் பின்னணி கொண்ட 5 குடும்பங்களைச் சேர்ந்த 15 பேருக்கு கடந்த தினத்தில் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து அவர்கள் கொரோனா சிறப்பு சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த தொற்றாளர்கள் தனிமைப்படுத்தகப்பட்டு இருந்த வீட்டுக்கு அருகாமையில் வசித்து வந்த முதியவர் ஒருவர் கடந்த சில மாதங்களாக வயது மூப்பு காரணமாக ஏற்பட்ட நோய் பாதிப்புக்குள்ளாகி இருந்த நிலையில் நேற்று முன் தினம் அதிகாலை வேளை உயிரிழந்தார்.

உயிரிழந்த முதியவரின் குடும்ப உறுப்பினர்கள் சிலருக்கு காய்ச்சல் அறிகுறி ஏற்பட்டிருந்த தகவல் கிடைக்கப் பெற்றதை அடுத்து அவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினரால் உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் உயிரிழந்த முதியவர் உட்பட மேலும் நால்வருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த முதியவர் மற்றும் அவரது மகன் உள்ளிட்ட குடும்பத்தினர் நால்வருக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து உயிரிழந்த முதியவரின் உடல் சுகாதாரத் தரப்பின் வழிகாட்டுதலில் யாழ். கோம்பயன் மின் மயானத்தில் தகனம் செய்யப்பட இருப்பதாகவும், இந்த தொற்றாளர்கள் மற்றும் மரண நிகழ்வில் பங்கேற்றவர்களைக் கண்டறிந்து தனிமைப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்து வருவதாகவும் பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

## சீனர்களிடமிருந்து...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திஸ்ஸமஹாராம வாவி அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டிருந்த சீன பிரஜைகள் அணிந்திருந்தது இராணுவச் சீருடை அல்ல என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறுகின்றார். நாட்டு மக்கள் பார்வையற்றவர்கள் என்ற எண்ணத்திலா அவர் இவ்வாறு கூறுகின்றார்?

வாகனங்கள் பழுது பார்க்கும் இடங்களிலும், சில காவல் பணிபுரியும் தொழிலாளர்களும் இவ்வாறான ஆடைகளை அணிவதாகவும் கெஹலிய ரம்புக்வெல சுட்டிக்காட்டியுள்ளார். எந்தப் பகுதிகளில் அவர் இதனை அவதானித்துள்ளார் என்பதை வெளிப்படுத்தவேண்டும்.

இவ்வாறு பொய் கூறி மக்களை தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருக்க வேண்டாம் என்று வலியுறுத்துகின்றோம்.

திஸ்ஸமஹாராம வாவியில் இடம்பெறும் அபிவிருத்திப் பணிகள் முற்றிலும் தொல்பொருள் கட்டளைச் சட்டத்துக்கு முரணானவையாகும். தொல்பொருள் முக்கியத்துவம் உடைய இடங்களில் இவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுக்க அனுமதி வழங்கப்படவில்லை. இதனை யாரிடம் சென்று முறையிடுவது? காரணம் அரசு சீனர்களின் நடவடிக்கைகளை பாதுகாப்பதிலேயே முன்னின்று செயற்படுகிறது.

எனவே தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய முன்வருமாறு மகா சங்கத்தினருக்கும், பாதுகாப்பு படையினருக்கும் அழைப்பு விடுகின்றோம். இந்த விடயத்தில் தலையிட்டு எமது உரிமைகளை பாதுகாப்போம் என்று வலியுறுத்துகின்றோம் - என்றார். (அ)

## நிறுவன...

"புனரமைப்பு பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தின் சீருடையில் ஒரு பகுதியே அது", என்று சீனத் தூதரகம் பதில் அளித்துள்ளது.

சீன இராணுவ சீருடையை ஒத்த உடையுடன் வெளிநாட்டினர் திஸ்ஸமஹாராமவில் இருப்பது குறித்து எதிர்க்கட்சி கேள்வி எழுப்பியிருந்தது.

இது தொடர்பில் பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ண சீன தூதரகத்திடம் விளக்கம் கேட்டு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அத்துடன், இது போன்ற செயல்பாடுகள் இனி நிகழாமல் பார்க்குமாறும் அவர் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த சீனத் தூதரகம் அந்த ஆடை புனரமைப்பு பணியில் ஈடுபடும் ஊழியர்களின் சீருடையே அது என்று விளக்கமளித்துள்ளது. (ஐ)

## குற்றச்சாட்டுகள்...

குற்றவியல் புலனாய்வு திணைக்களம், இராணுவ உளவுத்துறை ஆகியவற்றின் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு விசாரித்தபோதே இவை ஆதாரமற்றவை என்று தெரிய வந்தன.

சில குழுக்கள் இந்த விடயத்தில் தமது சொந்த நலன்களுடனான கவலைகளை வெளிப்படுத்தியுள்ளன என்றும் அவர் இதன்போது சாடினார். (ஐ)

## கொரோனா...

துள்ளது.

31 பெண்களும் 16 ஆண்களும் உயிரிழந்தனர்.

பெண்களில், 21 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், 10 பேர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள்.

ஆண்களில் 13 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், இருவர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள், ஒருவர் 30 வயதுக்கு குறைவானவர்.

# தனது 76 ஆவது பிறந்த நாளில் சந்திரிகா வெளியிட்ட செய்தி



கொழும்பு, ஜூலை 01

நான் மரணிக்கின்ற தினத்தன்று என்னால் எதிர்கால சந்ததிக்கு சிறந்த உதாரணமாக விளங்க முடியுமென்றால் என் மகிழ்ச்சி அவ்வளவு அளவிடமுடியாததாகயிருக்கும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் 76வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று முகநூலில் தனது கருத்தினை பதிவிட்டுள்ள, அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:

"எனக்கு தற்போது எழுபத்தாறுவயது. எழுபத்தாறு வருடங்களின் முன்னர் நான் இந்த உலகிற்கு தனியாகவே வந்தேன். நான் மாத்திரமல்ல அனைவரும் தனியாகவே வந்தோம். ஒருநாள் நான் வெறுங் கையுடன் தனியே போகநேரிடும்.

ஆனால் இந்தஉலகிலிருந்து விடைபெறும் நாள் அன்று நாங்கள் இன்னொரு பொருளை எடுத்துச்செல்கின்றோம். அது எங்கள் வாழ்க்கையில் நாங்கள் செய்த விடயங்களிற்கு ஏற்ப எமக்கு கிடைக்கின்ற நற்பெயர் அல்லது மோசமான பெயர்.

இந்த யதார்த்தத்தை நான் சிறுவயது முதல் உணர்ந்துள்ளேன். உலகில் எங்கள் வாழ்க்கை காலத்தில் நாங்கள் நாங்கள் எங்கள் வாழ்க்கையை ஒளிமயமாக்கி உலகை சிறந்த இடமாக மாற்றவேண்டும். எனது வாழ்நாள் முழுவதும் என்னால் முடிந்தளவிற்கு அந்த கடமையை நிறைவேற்ற முயன்றுள்ளேன்.

எனது வாழ்நாளில் நான் எனது தேசத்திற்கும் மக்களிற்கும் உலகிற்கும் எதனையாவது செய்திருப்பேன் என்றால் உலகை சிறந்ததாக மாற்றுவதற்காகவே நான் அதனை செய்தேன். நான் மரணிக்கின்ற தினத்தன்று என்னால் எதிர்கால சந்ததிக்கு சிறந்த உதாரணமாக விளங்கமுடியுமென்றால் என் மகிழ்ச்சி அவ்வளவு அளவிட முடியாததாகயிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மத்திய கிழக்கு நாடுகளின் பயணிகளுக்கான

# தற்காலிக தடையை நீக்கியது இலங்கை

கொழும்பு, ஜூலை 01

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மத்திய கிழக்கு நாடுகள் சிலவற்றில் இருந்து வரும் பயணிகளுக்கு இலங்கை திட்டமிட்டிருந்த தற்காலிக தடை, நிபந்தனைகளுடன் நீக்கப்பட்டுள்ளது எனச் சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், சவூதி அரேபியா, ஓமான், பஹ்ரைன் மற்றும் குவைத் ஆகிய நாடுகளில் இருந்து ஜூலை முதலாம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை பயணிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வரும் பயணிகளை நிபந்தனைகளுடன் அனுமதிப்பதற்குக் கொரோனாத் தடுப்பு மத்திய நிலையம் வழிகாட்டல் வழங்கியுள்ளது.

இலங்கைக்கு வருவதற்கு 96 மணி நேரத்துக்குள் பெறப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும் என்றும், அன்டிஜன் பரிசோதனை முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்றும் சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வரும் பயணிகள் ஹோட்டல் தனிமைப்படுத்தல் வசதியை அல்லது கட்டுப்பாட்டுடன் கூடிய பயண ஒழுங்கு விதியைப் பின்பற்ற வேண்டும் என்றும் குறித்த அதிகார சபை தெரிவித்துள்ளது. (இ)

## தேர்தல்...

சார்பாக அனுர குமார திஸாநாயக்க எம்.பி., விஜித ஹேரத் எம்பி, மனோ கணேசன் எம்பி, ரவூப் ஹக்கீம் எம்.பி., வேலுகுமார் எம்பி, உதயகுமார் எம்.பி., முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நிசாம் காரியப்பர், த.மு.கூ. - ஐ.ம.மு. கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணிதரன் முருகேசு ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இன சிறுபான்மை கட்சிகளும், அரசியல் சிறுபான்மை கட்சிகளும், ஒருமுகமாக எதேச்சதிகார தேர்தல் முறை மாற்ற நடவடிக்கைகளை எதிர் கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

தற்போதுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் சிறிய கட்சிகளுக்கு சாதகமான சில அம்சங்கள் உள்ளன. அவற்றை மாற்றியமைக்க வேண்டும் பிரதான கட்சிகள் சில கோரிக்கை முன்வைத்துள்ள நிலையிலேயே நேற்றைய சந்திப்பு அவசரமாக இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் முறைமை சீர்திருத்தம் தொடர்பில் கட்சிகளின் நிலைப்பாட்டை பாராளுமன்ற தெரிவுக்குழு கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புனர்வாழ்வு...

கிணைப்பாளராக பிரதம மந்திரியின் ஒருங்கிணைப்புச் செயலாளர் காசிலிங்கம் கீதநாத்துக்கு மேலதிக பொறுப்பு வழங்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து இதற்கான தனது நியமனப் பத்திரத்தை அவர் நேற்று பெற்றுக்கொண்டார்.

## 1,864 பேருக்கு...

தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 59 ஆயிரத்து 89 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 481 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 25 ஆயிரத்து 952 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 60 ஆக அதிகரித்துள்ளது. (இ)

ஈழநாடு
Eelanadu

# ஜனாதிபதியின் உரையின் பின்னர் அரசுமீது மக்கள் நம்பிக்கையிழப்பு

## சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜுலை 01

"ஜனாதிபதியின் நாட்டு மக்களுக்கான விசேட உரையின் பின்னர் மக்கள் அரசின் மீது வைத்திருந்த நம்பிக்கை முழுமையாக இல்லாது போயுள்ளது."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அரசின் தவறான செயல்பாடுகள் காரணமாக நாட்டில் பாரிய அரச எதிர்ப்பு அலை உருவாகியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசு தவறுகளைத் திருத்திக்கொள்ளவில்லை என்றால், ஏனைய சக்திகளுடன் இணைந்து ஆட்சி மாற்றத்தை உருவாக்கும் நேரடியான போராட்டத்தில் ஈடுபட நேரிடும். அதனைத் தவிர நாட்டு மக்களைப் பாதுகாக்க மாற்றுவழி கிடையாது. நாடு பலவிதமான நெருக்கடிகளைத் தொடர்ச்சியாக சந்தித்து வருகின்றது. நாட்டில் தற்போது 'பொசிடிவ்'ஆக இருப்பது கொரோனா ஒன்று மட்டுமே. ஏனைய சகல விடயங்களும் நெருக்கடியில் உள்ளது.

அரசு நாட்டின் நிலைமைகளை சரியாகக் கையாள முடியாது, பலவீனமுற்றுள்ளமை தெளிவாகின்றது.

ஆனால், கொரோனா வைரஸ் பரவலைச் சாட்டாக வைத்துக்கொண்டு அரசு, அதன் இனவாதச் செயற்பாடுகளை முன்னெடுப்பதைக் கைவிடுவதாகத் தெரியவில்லை. வடக்கு, கிழக்கில் தொல்லியல் பகுதிகள் என்ற பெயரில் வழமையை விடவும் வேகமாக நில ஆக்கிரமிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்" - என்றார். (இ)

# இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கின்றது சீனா; முழுமையான ஒத்துழைப்பு வழங்குகின்றது இலங்கை

## கௌதாரிமுனையில் சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜுலை 01

இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கும் செயற்பாடுகளில் சீனா ஈடுபட்டுள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதற்கு இலங்கை முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றது எனவும் அவர் சாடினார்.

கிளிநொச்சி, பூநகரி - கௌதாரி முனைப் பகுதியில் சீன நிறுவனமொன்றால் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணையைப் பார்வையிடுவதற்காக நேற்று அங்கு சென்றிருந்தபோதே சிறிதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஏற்கனவே இலங்கையின் தென்பகுதியிலே கால்வைத்துள்ள சீனா தற்போது வடக்கிலும் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

கௌதாரிமுனை மீனவர்கள் கடலட்டை வளர்ப்புக்கு முன்வைத்த கோரிக்கைகள் மறுக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது சீனர்கள் இங்கு கடலட்டைப் பண்ணையை நடத்தி வருகின்றனர்.

இதனைப் பார்க்கும்போது சீனாவுக்கு கடலட்டை ஏற்றுமதி செய்யும் இடமாக இது விளங்கினாலும் இதற்குப் பின்னால் அரசியல் உள்ளது.



இவ்வாறான விடயம் ஈழத் தமிழர்களுக்கு மாத்திரம் அல்லாது இலங்கைக்கு அண்மையிலுள்ள இந்தியாவுக்கும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

இதேவேளை, இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கும் மற்றும் இந்தியாவைக் கண்காணிக்கும் செயற்பாடுகளை சீனா முன்னெடுத்து வருகின்றது. அதற்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்குகின்றது. எவ்வாறாயினும் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள குறித்த கடலட்டை பண்ணை தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்" - என்றார். (இ - 03)

# அனைத்து அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்குக

## ஜனாதிபதியிடம் சஜித் வேண்டுகோள்

கொழும்பு, ஜுலை 01

"அரசியல் கைதிகளை வைத்து அரசியல் நடத்த வேண்டாம் என்று அரச தரப்பினர் உள்ளிட்ட அரசியல் வாதிகளை கேட்டுக்கொள்கின்றேன். அதேவேளை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக அடைத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பின் கீழ் விரைவில் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விவகாரம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எமது நல்லாட்சி அரசில் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்திருந்தோம். அவர்களில் பலருக்கு எதிரான வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தியிருந்தோம். எனினும், இறுதியில் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாத துரதிர்ஷ்ட நிலைமை ஏற்பட்டது. நல்லாட்சி அரசுக்குள் இருந்த முரண் பாடுகள் மற்றும் அன்று எதிரணிப் பக்கம் இருந்த மஹிந்த ராஜபக்ஷ அணியினரின் எதிர்ப்புக்கள் காரணமாக அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

இம்முறை ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியமைத்திருந்தால் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவித்திருப்போம். தேர்தல் காலங்களில் இந்த வாக்குறுதிகளை தமிழ் மக்களுக்கு வழங்கியிருந்தோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்களை புனர்வாழ்வளித்து விடுதலை செய்த ராஜபக்ச அரசு, விடுதலைப்புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய மற்றும் அவர்களின் கட்டளையின் பிரகாரம் செயற்பட்ட தமிழ் இளைஞர்களை நீண்டகாலமாகச் சிறைளில் அடைத்து வைத்திருப்பது எந்த வகையில் நியாயம்?

தமக்கு விசுவாசமான மரண தண்டனைக் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பின் கீழ் விரைவில் விடுதலை செய்ய வேண்டும்" - என்றார். (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர்: உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் வியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் ஆரம்பம், குள்ளநரிக்கூட்டம் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - திரை விமர்சனம்- வணக்கம்டா மாப்ள



**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு- இசைக்குழுக்களுக்கான போட்டி நிகழ்ச்சி (மறுஒளிபரப்பு)
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்